மலர்-2 இதழ்-35 பிப்ரவரி 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## மாப்பிள்ளை சீர் பெறும் சிவபெருமான்




## பக்திக்கு எளிமையே போதும்

# திருவாதிரை களி தோன்றிய வரலாறு

சிதம்பரத்துக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தில் சேந்தன் எனும் சிவபக்தன் வாழ்ந்து வந்தான். விறகு வெட்டி, அதை விற்று, காசாக்கி, பிறகு உணவாக்கி தனது வாழ்க்கையை தொடர்ந்து வந்தார். சாதாரண வாழ்க்கைதான் என்றாலும் தினமும் சிவனடியார் ஒருவருக்காவது உணவு வழங்கிவிடவேண்டும் என்ற கொள்கையுடன் தனது நித்திய கடமையை செய்து வந்தார்.

இறைவனின் சோதனை ஆரம்பமானது....

திடீரென்று தொடர் மழை பொழிய ஆரம்பித்தது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதித்தது. சேந்தனால் விறகு வெட்டமுடியவில்லை.

அப்படியே வெட்டியெடுத்தாலும் முழுக்க நனைந்திருந்ததால், விற்கவே இல்லை. விற்றால்தான் காசு, காசு வந்தால்தான் அரிசி. அதை உணவாக்கினால்தான் பசியாறமுடியும். முக்கியமாக, சிவனடியாருக்கு வழங்கமுடியும். தவித்துப் போன சேந்தனுக்கு அப்போது கை கொடுத்தது வரகு.

வரகுதான் இன்றைக்கு என தேற்றிக் கொண்டான். வரகில் களி செய்தான். 'அப்பாடா சிவனடியாருக்கு உணவு தயாராக இருக்கிறது' என பூரித்தான். ஆனால் இந்த வரகு களியை எந்த சிவனடியார் உண்பார்? என்ற கேள்வி மனதை வாட்டியது.

ஈசனையே சதாசர்வமும் நினைக்கும் சேந்தனை ஊரும் உலகமும் நினைக்க வேண்டும் என திருவுளம் கொண்டார் சிவனார். அடுத்து சிறிது நேரத்தில், சேந்தனாரின் முன்னே சிவபெருமானே சிவனடியார் போன்று வந்து நின்றார்.

சேந்தன் சிவனடியாரை வரவேற்றான். கைகூப்பினான். ஆசனத்தில் அமரச் செய்தான். வாழை இலையைக் கொண்டு வந்து எதிரில் வைத்தான். அதில் சுடச்சுட களியைப் பரிமாறினான். அவன் முகம் முழுக்க களிப்பு களைகட்டியது.

சிவனடியாராக வந்த சிவபெருமான், களியை எடுத்து, ரசித்து ரசித்துச் சாப்பிட்டார். ருசித்து ருசித்துச் சாப்பிட்டார். வார்த்தைக்கு வார்த்தை பாராட்டினார். 'இது களியமுது' என புகழ்ந்தார். நெகிழ்ந்து நெக்குருகிப் போனான் சேந்தன்!

'அமிர்தம் அமிர்தம்' என சாப்பிட்டு கையலம்பினார். 'இன்னும் கொஞ்சம் கொடு. வழியில் பசித்தால் சாப்பிட்டுக் கொள்கிறேன்' என்றார். அழுதேவிட்டான் சேந்தன். நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான்.

மறு நாள் விடிந்தது, பிரமாண்டமான சிதம்பரம் கோயில் நடை திறக்கப்பட்டது. தீட்சிதர்கள் சிவபூஜைக்காக, சந்நிதி சந்நிதியாகத் திறந்து, பூஜை கைங்கர்யத்தில் இறங்கினார்கள். அப்போது, சிவனார் குடிகொண்ட கருவறைக் கதவைத் திறந்தார்கள். ஆச்சரியத்தில் அப்படியே பிரமித்து நின்றார்கள்.

கருவறை வாசலில் களி. மூலவரை நோக்கிச் செல்லும் இடமெல்லாம் களித் துளிகள். மூலவரின் திருவாயில் களிப் பருக்கைகள். திருக்கரத்தில் களி. சந்நிதியில் எங்கு திரும்பினாலும் களியமுது!

'இதுவரை இந்த உணவை இறைவனுக்குப் படைத்ததே இல்லையே எப்படி இப்படி?' குழம்பித் தவித்தார்கள் தீட்சிதர்கள். ஊர்மக்களுக்கு இந்த சேதி பரவியது. மன்னனின் காதுகளையும் சென்றடைந்தது.

முதல்நாள் இரவில், மன்னனின் கனவில் வந்த ஈசன், சேந்தனின் களியமுதையும் அதன் ருசியையும் அவனுடைய பக்தியையும் தெரிவித்துச் சென்றிருந்தார். ஆனால் இப்படியெல்லாம் நடக்கும் என்று மன்னன் அறியவில்லை. சேந்தன் யார்? எந்த ஊர்? அழைத்து வர ஆட்கள் விரைந்தனர். ஆனால் சேந்தனைக் காணோம்!

அன்றைய தினம், ஆலயத்தில்ஞ் ஸ்ரீநடராஜர் பெருமான் ரதோத்ஸவத்தில் பவனி வரும் வைபவம். மன்னனும் வந்திருந்தான். மக்களும் கூடியிருந்தனர். தேர் வடம் பிடிக்க மன்னன் உட்பட அனைவரும் ஆவல்கொண்டு இழுத்தனர். முதல்நாள் பெய்த மழையால், சேறாகிவிட்டிருந்தது. சேற்றில் சிக்கிக் கொண்டது தேர்ச் சக்கரம். ஒரு அடி கூட நகர்த்தவே முடியவில்லை.

அந்தக் கூட்டத்தில், தேர் வடம் பிடிப்பவர்களில் ஒருவனாக சேந்தனும் நின்றிருந்தான். கூட்டத்துடன் கூட்டமாக நின்று, வடம் பிடித்துக் கொண்டிருந்தான். அப்போது, 'சேந்தனாரே! என் மீது பல்லாண்டு பாடுங்கள். நீர் பல்லாண்டு பாடினால்தான் தேர் நகரும்' என்று கோயிலில் இருந்த அனைவருக்குமாக அசரீரி கேட்டது. மன்னர், தீட்சிதர்கள், மக்கள் என அனைவரும் திகைத்துப் போனார்கள். யார் இந்த சேந்தன் என்று கூட்டத்தைக் கூட்டமாகப் பார்த்தார்கள்.

'சாமீ. நமக்கு பாட்டெல்லாம் வராது சாமீ' என்றான் சேந்தன். 'உன்னைத்தான் தெரியும் எனக்கு. பாட்டு தெரியாதே' என்றான். 'முடியும். பாடு. இன்று நீ பாடுவாய்' என மீண்டும் கேட்டது அசரீரி!

'மன்னுக தில்லை' என்று கண்கள் மூடி, கரம் குவித்துப் பாடினான் சேந்தன். பிறகு அவர் பதிமூன்று பாடல்கள் பாடினார். அனைவரும் மெய்யுருகிப் போனார்கள். சட்டென்று சகதியில் இருந்து நகர்ந்து முன்னேறியது தேர்!

அதுவரை சேந்தனாக இருந்தவன், சேந்தனார் எனப் போற்றப்பட்டார். அவரைச் சுற்றிக் கொண்டார்கள். விழுந்து வணங்கினார்கள். அப்போதுதான் நேற்று துவங்கி இதோ இப்போது வரை நடப்பதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்து, உணர்ந்து, தெளிந்து, சிலிர்த்து உருகினார் சேந்தனார்!

மனிதர்களுக்குள் சாதாரணன், அசாதாரணமானவன் என்பதெல்லாம் உண்டு. ஆனால், ஏழையோ சாமானியனோ அங்கே உண்மையான பக்தியே கடவுளைக் குளிர்விக்கும். மகிழச் செய்யும். அருள வழிவகுக்கும்!

சேந்தனாருக்கு, சிவபெருமானே வந்து அருள்புரிந்த நன்னாள் மார்கழித் திருவாதிரைத் திருநாள்.

எனவே இன்றும் சிவாலயங்களில், மார்கழி திருவாதிரையின் போது, களி செய்து இறைவனுக்குப் படைத்து பிரசாதமாக வழங்குவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது!




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

## ஆன்மாவின் பிரதிநிதியான வாகனங்கள்

## பந்த பாசத்தை போக்கும்

# பலிபீடம்

திருக்கோயில் அமைப்பில் முன் கோபுரம், பிரகாரங்கள், கொடிமரம், வாகனம், விமானம் முதலியன முக்கியமானவை. இவை அனைத்தும் தத்துவ அடிப்படையில் அமைந்தவை ஆகும். மனிதன் இயல்பை அறிவுறுத்துவதே ஆலய அமைப்பாகும்.

கோ + இல் = கோயில் தலைமையான இல்லம் என்பது பொருள். ஆ + லயம்= ஆலயம். ஆன்மா உயிர்; லயிக்கும் இறைவனோடு ஒன்று படும் இடம் என்பது பொருள். மனிதர் யார்? என்பதனை விளக்குவதே ஆலய வழிபாட்டு நிலையாகும். மனிதன் உடம்பாக மாட்டான். குணமாக மாட்டான். அறிவு ஆகமாட்டான். இவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்டவன். அந்த நிலையே ஆன்மா ஆகும்.

ஆன்மாவின் பல்வேறு நிலைகளைச் சர்வ ஞானோத்தரம் என்னும் ஆகமம் சிறப்பாக விளக்குகின்றது. மனிதன் தன் உடம்பையே, தூல தேகத்தையே, பரு உடலையே தானாகக் கருதும்போது தேகான்மா எனப்படுகின்றான். சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆகிய வாக்குக்கள் அடிப்படையான இச்சைகள் ஆகிய வற்றைத் தானாகக் கருதும்போது அந்தரான்மா எனப்படுகின்றான்.

தத்துவங்களையும், அவற்றை அறியும் கருவி யாகிய மனத்தையும் தானாகக் கருதும்போது தத்துவ ஆன்மா எனப்படுகின்றான். முற் கூறிய அனைத்தையும் அடக்கியாளும் உணர்வு தோன்றி, அதனால் நான் பிரமம் என்ற முனைப்பு ஏற்படும்போது சீவான்மா எனப்படுவான். பின் நல்லறிவு தோன்றி யான், எனது என்ற செருக்கு நீங்கிப் பேரின்பத்தை அடைய மந்திரம் செபிக்கும்போது மந்திரான்மா எனப்படுவான். இறுதியாக, இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையில் பரமான்மா எனப்படுவான்.

இவற்றையெல்லாம்அடிப் படையாகக் கொண்டே கோயில் அமைப்புகள் உள் ளன. முன் கோபுரம் உயர்ந்து காணப்படும். அதுவே தேகான்மா அல்லது தூல லிங்கம் எனப்படும். பலிபீடம் அந்தரான்மா அல்லது பத்திரலிங்கம் எனப்படும். கொடிமரம் தத்துவான்மா அல்லது துவச லிங்கம் எனப்படும். கருவறையில் உள்ள லிங்கம் சீவான்மா அல்லது சதாசிவ லிங்கம்எனப்படும்.

இதுவே அருவுருவ நிலையாகும். 'காணாத அருவினுக்கும் உருவி னுக்கும் காரணமாய், நீள் நாகம் பூண்டார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்' என்பார் சேக்கி ழார்பெருமான். சிவத்துக்கு லிங்கம் சிவத்துக்கு அடையாளம் சிவத்துக்குக் குறி சிவலிங்கம் ஆகும்.

உருவம்நடராசர், தட்சிணாமூர்த்தி, சோமாஸ் கந்தர் முதலிய வடி வங்கள், மகேசுவர மூர்த்தங்கள் எனப் படும். உருவம் இல்லாதது அருவ நிலை, ஞானியர்களால் வழிபடும் நிலையாகும். அருவுருவம் சிவலிங்கம் ஆகும். இம்மூன்று நிலையும் ஆன்மாக்கள் உய்ய வேண்டும் என்பதற்காக இறைவன் கொண்ட நிலையாகும். "உருமேனி தரித்துக் கொண்டதுஎன்றலும், உருவு இறந்த அருமேனி அதுவும் கண்டோம், அருவுருவான போது திருமேனி உபயம் பெற் றோம், செப்பிய மூன்றும் நந்தம்கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே!" என்று சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது.



திருக்கோயில் பூசை செய்யும் அர்ச்சகர் மந்திரான்மா அல்லது ஆன்ம லிங்கம் எனப் படும். பரந்த பெருவெளி பரமான்மா அல்லது அகண்டலிங்கம் எனப்படும். இவற்றுள் பலிபீடம் என்றதும் பலி கொடுப்பதுஉயிர்ப்பலி இடுவது என்ற தவறான எண்ணம் உண்டாகிறது. 'கொடுமணி இயக்குமின் குறிஞ்சி பாடு மின், நறும்புகை எடுமின், பூப்பலி செய்ம் மின், காப்புக் கடைநிறுமின்' என்று இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தில் குறிப்பிட்டுள்ளார். 'பூசை செய்யும் போது மணி யடிக்க வேண்டும். தோத்திரம் பாட வேண்டும். வாசனைப் புகை எடுக்க வேண்டும். பூக்களைப் பலியாகத் தூவ வேண்டும். பூசை செய்வோர் காப்புக்கட்ட வேண்டும்'என்ற முறை வழிபாட்டில் பண்டு தொட்டு இருந்து வந்ததை இளங்கோவடிகள் சுட்டி யுள் ளார்.

தற்காலத்தில் புஷ்பாஞ் சலி என்று கூறுவதையே இளங்கோவடிகள் பூப்பலி செய்தல் எனத் தமிழில்







ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

குறிப்பிட்டுள்ளார். கோவில்களிலுள்ள பலிபீடம் தத்துவ அமைப்பு உடையது. உயிர்ப்பலி இடுவது ஆகாது. திருக்கோயில் அமைப்பு முறைகளைத் தெளிவாகப் பாடியவர் திருமூலர் ஆவார். கோயில் அமைப்பு முறைகளை நன்கு ஆராய்ந்து அறிவோர், கருவறையில் மேல் உள்ள விமானம் தூல லிங்கம் என்றும் கருவறையில் உள்ளே உள்ளது சதாசிவ லிங்கம் அல்லது சூக்கும லிங்கம் என்றும், முன் பகுதியில் விரிந்து காணப்படும் பலிபீடம் பத்திர லிங்கம் என்றும் கொள்வார்கள். “தூய விமானமும் தூலமது ஆகுமால்ஆய சதாசிவம் ஆகும் நற் சூக்குமம்பாய பலிபீடம் பத்திர லிங்கமாம் ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே” என்பது திருமந்திரப் பாடல் ஆகும்.

பலிபீடம், வாகனம், சிவலிங்கம் மூன்றும் முறையாக அமைந்திருக்கும். பலிபீடம்பாசத் தின் அறிகுறி. வாகனம் பசுவை உயிரைக் காட்டும் அறிகுறிப் பொருள். கருவறையில் அருவுருவமான சிவலிங்கம் பதியைக் காட்டும் அறிகுறியாகும்.

“ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம் ஆய பசுவும் அடல் ஏறு என நிற்கும் ஆய பலிபீடம் ஆகும் நற்பாசம் ஆம்ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே” என்று திருமூலர் பாடி யுள்ளார். திருக்கோயில் அமைப்பை ஆராய்ந்து அறி வோர்க்குக் கருவறையில் உள்ள சிவலிங்கம் பதியாகும். லிங்கத்தின் முன் உள்ள எருது வாக னமே (ஆன்மா) ஆகும். பின் உள்ள பலிபீடம் பாசம் ஆகும் என்பது பாடற் பொருள்.

ஆன்மா, பாசத்தைவிட்டுப் பதியை அடைய வேண்டும். ‘பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியை அடைதல்’ என்று சிவஞான சித்தி யார் குறிப்பிடுகின்றது. கோவிலுக்குள் செல்லும் போது யான், எனது என்னும் செருக்கு, உலக பந்த பாசங்கள் ஆகியவற்றைப் பலியிட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவே பலிபீடம் அமைக்கப்பட்டது.

எருது வாகனம் லிங்கத்தை நோக்கும்போது பலிபீடம் அதன் பின்னே அமைகிறது. பதியையே நினைக்கின்ற உயிர்களுக்குப் பாசங்கள் பிற்பட்டுத் தங்கிவிடும். எருது வாகனம் லிங்கத்தை நோக்காது வெளியே நோக்கினால், பலிபீடம் முன்னே இருக்கும். சிவ சிந்தனையில்லாதுஉலக சிந்தனை உடைய வர்க்குப் பாசங்கள் மேலோங்கியிருக்கும். கோவில்களில் உள்ள வாகனங்கள் ஆன்மாக் களின் பிரதிநிதிகள். பலி பீடங்கள் உலக பாசங்கள். எனவே உலக பாசங்களை விட்டு நீங்கி இறைவனை அடைவதே உண்மை நிலை யாகும்.

தொகுப்பு: ஆன்மிக கருத்தியல்

# நவக்கிரக வழிபாட்டு பலன்



நவக்கிரகங்களை வணங்கினால் தடைகள் தீங்கி, வேண்டியது யாவும் கிடைக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் எந்த பலன்களுக்கு யாரை வணங்க வேண்டும் என்பது பலரின் சந்தேகம். நவக்கிரகங்களை வணங்கினால் தடைகள் தீங்கி, வேண்டியது யாவும் கிடைக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் எந்த பலன்களுக்கு யாரை வணங்க வேண்டும் என்பது பலரின் சந்தேகம்.

புகழ் வேண்டுவோர் சந்திர பகவானையும், நல் ஆரோக்கியம் வேண்டுவோர் சூரிய பகவானையும், பூமி யோகம் வேண்டுவோர் செவ்வாயையும், அறிவுக் கூர்மை வேண்டுவோர் புதனையும், சமூக அந்தஸ்து வேண்டுவோர் குரு பகவானையும், பிறரை கவரும் பேச்சிற்கும், தோற்றத்திற்கும் சுக்ரனையும், திடமான மனம் மற்றும் சொல்லுக்கு சனீஸ்வரனையும், எதிரியை வெல்லும் தன்மைக்கு ராகுவையும், ஞாலம் போற்றும் ஞானம் பெற கேதுவையும் வணங்க வேண்டும்.





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

**Tamilnadu Government Redg.304/2016**

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 310601011001269**
**IFSC CODE:VIJB0003106**
**MICR CODE: 600029043**
**VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
8825844033



# அம்பாள் பிறந்த ஊரில் மாப்பிள்ளை சீர் பெறும் சிவன்

## சர்ப தோஷம் தீர்க்கும் தென்காளஹஸ்தி

பதினாறாம் நூற்றாண்டில் பாண்டி நாட்டை ராணி மங்கம்மாள் ஆட்சி செய்தார். அப்போது அவருக் கும் திரிவிதாங்கூர் மன்னர் ரவிவர்ம னுக்கும், தேனி மாவட்டத்தில் உள்ள உத்தமபாளையத்தில் எல் லைப் பிரச்சினை தொடர்பாகபோர் நடைபெற்றது. அந்தப் போர் நடை பெற்ற போது உத்தமபாளையம் பகுதியில் பிச்சை பிள்ளை என்பவர் கணக்குப் பிள்ளையாக இருந்தார்.

இந்த கணக்குப்பிள்ளை தீவிரசிவ பக்தராக விளங்கினார். திருப் பதிக்கு அருகிலுள்ள திருக்காளஹஸ்தியில் கோயில் கொண்டிருக்கும் காளஹஸ்தீஸ்வரரை, மாசி மகா சிவராத்திரி அன்று வழிபடுவதை வழக்கமாக வைத்திருந்தார்.

போர் நடைபெற்றகாரணத்திற் காகவும், முதுமை காரணமாக ஒரு கட்டத்தில் அவரால் காலஹஸ்திக்குப் பயணம் செய்யமுடியாத சூழல் ஏற் பட்டது. இதைத் தாங்கமுடியாத பிச்சை கணக்கர், உணவு, உறக்கம் மறந்து காளஹஸ்தீஸ்வரையே நினைத்துக் கொண்டிருந்தார்.

அவரது வேண்டுதலுக்காக லிங்க ரூபமாக எழுந்தருளினார். அதனா லேயே சிவன், “காளத்தீஸ்வரர்’ என்றும், தலம் “தென்காளஹஸ்தி’ என்றும் பெயர் பெற்றது.

சித்திரையில் திருக்கல்யாணம், ஐப்பசி யில் அன்னாபிஷேகம், மார்கழியில்





ஆருத்ராதரிசனம், சிவராத்திரி, திருக்கார்த்திகை ஆகியவை இத்திருத்தலத்தில் சிறப்பாக கொண்டாடப்படும் திருவிழாக்களாகும்.

இத்தலவிநாயகர் ராஜகணபதி என்ற திருநாமத் துடன் அருள்பாலிக்கிறார். சிவன் சன்னதி முன் மண்டப மேற்சுவரில் ராசி, நட்சத்திர கட்டத்தின் மத்தியில் வாஸ்து பகவான், பத்மாசனத்தில் அமர்ந்து சடாமுடியுடன் காட்சி தருகிறார்.

பஞ்சபூத தலங்களில் வாயுவிற்கு உரிய தலமாக விளங்கும் காளத்தீஸ்வரருக்கு இணை யான அனைத்து பலன்களையும் இத்தலம் பெற்றுள்ளது. ராகு, கேதுவுக்கு தனிசன்னதி உள்ளது. ராகு, கேது தோஷ நிவர்த்தி பெற இங்கு அதிகளவில் வேண்டிக்கொள்கிறார்கள்.

வாஸ்து பகவானின் தலைக்கு மேலே சிவலிங்கத்தை பிரம்மா, அம்பிகை இருவரும் பூஜிக்கும் சிற்பம் இருக்கிறது. இம்மூவரையும் ஒரு நாகம் சுற்றியுள்ளது. அருகில் சூரியன், சந்தி ரன், வியாக்ரபாதர், பதஞ்சலியும் இருக்கின்றனர்.

வாஸ்து பகவானைச் சுற்றிலும் 27 நட்சத் திரங்களுக்கான மிருகங்கள், 12 ராசி சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கடுத்து, சூரிய மண்டல ஆகாய ராசி சக்கரம் இருக்கிறது. நடுவில் சூரியபகவான், நின்றிருக்க அவரைச் சுற்றிலும் 12 ராசிகள் இருக்கிறது.

சிவன் சன்னதி கோஷ்டத்திலுள்ள தட்சிணா மூர்த்தி, கல்லால மரம் இல்லாமல் காட்சி தருகிறார். லிங்கோத்பவர், தனிச்சன்னதி அமைப்பில் இருக்கிறார். அருகில் பிரம்மா, பெருமாளும், எதிரே நந்தியும் இருக்கிறது.

காசி விசாலாட்சியுடன் விஸ்வநாதர், மீனாட்சி சொக்கநாதர் மற்றும் பராசக்தியுடன் சகஸ்ர லிங்கத்திற்கு பிரகாரத்தில் சன்னதிகள் இருக் கிறது.

பவுர்ணமியன்று சகஸ்ர லிங்கத்திற்கு விசேஷ பூஜைகள் நடக்கும். தட்சிணாமூர்த்தி அருகில் நின்றுகொண்டு கன்னிமூல கணபதி, விஸ்வநாதர், சொக்கநாதர், சகஸ்ரலிங்கம் ஆகிய மூர்த்திகளை ஒரே சமயத்தில் தரிசிக்கலாம்.

காளாத்திநாதர் இங்கு எழுந்தருளியபின்பு, அம்பிகைக்கு சன்னதி அமைக்க பக்தர்கள் விரும்பினார். இதற்காக பல சிலைகள் அமைத் தும், சிலை சரியாக அமையவில்லை. இதனால் அம்பிகை இல்லாத தலமாகவே இக்கோயில் திகழ்ந்தது.

ஒருசமயம் பக்தர் ஒருவரின் கனவில் தோன்றிய சிவன், “அம்பிகை முல்லைப்பெரியாற்றில் வரு வாள்!’ என்றார். அதன்படி, ஒருசமயம் ஆற்றில் வெள்ளப்பெருக்கெடுத்தபோது, ஒரு கூடை மிதந்து வந்தது. அக்கூடையில் அம்பிகையின் சிலை இருந்தது. மகிழ்ந்த பக்தர்கள் அம்பிகையை இங்கே பிரதிஷ்டை செய்தனர். காளாத்தியில் அருளும் அம்பிகையின் பெயரால், “ஞானாம்பிகை’ என பெயர் சூட்டினர்.

இந்த அம்பிகையின் முகத்தில் ஆற்றில் அடித்துவரப்பட்டபோது ஏற்பட்ட தழும்புகள் இருப்பதை தற்போதும் காணலாம். இந்த அம்பிகை இங்கு மிகவும் பிரசித்தி பெற்றவளாக அருளுகிறாள். கோயிலும் இவளது பெயரி லேயே அழைக்கப்படுகிறது. இப்பகுதியில்,

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com






aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

"ஞானாம்பிகை கோயில்' என்றால்தான் தெரியும்.

காளத்தீஸ்வரர், ஞானாம்பிகை இருவருக்கு மிடையே சண்முகர் (சோமாஸ்கந்த அமைப்பில்) தனிச்சன்னதியில் இருக்கிறார். கோயில்களில் ஒரு சன்னதியில் நின்று ஒரு சுவாமியையே தரிசிக்க முடியும். ஆனால் இங்கு ஒரே சமயத்தில் அம்பிகை, முருகப்பெருமான் இருவரையும் தரிசிக்கலாம்.

அம்பாள் சன்னதிக்கு எதிரில் ஒன்பது துளைகளுடன் கூடிய கல் ஜன்னல் இருக்கிறது. இதற்கு அருகில் அமர்ந்து கொண்டால், இவ்விருவரின் தரிசனமும் நமக்குக் கிடைக்கிறது. இத்தகைய தரிசனம் கிடைப்பது அபூர்வம். தாய், மகன்களின் ஒற்றுமைக்கான பிரார்த்தனை தலமாகவும் இக்கோயில் திகழ்கிறது. மகனைப்பிரிந்துள்ள தாயார், இங்கு வேண்டிக்கொள்ள அவர்கள் ஒன்று சேர்வர் என்கிறார்கள்.

ஆற்றில் வந்த அம்பாள், இத்தலத்திலிருந்து சற்று தூரத்திலுள்ள கோகிலாபுரம் என்ற இடத்தில் கிடைக்கப்பெற்றாள். எனவே, இவ்வூரை அம்பிகையின் பிறந்த வீடாகக் கருதுகின்றனர். சிவன், அம்பிகை திருக்கல்யாணம் நடக்கும்போது, இவ்வூரிலிருந்து பக்தர்கள் அம்பிகைக்கு பிறந்த வீட்டுச் சீரும், தங்களது மருமகனான சிவனுக்கு வஸ்திரங்களும் கொண்டு வருகின்றனர். இதையே சிவன், அம்பிகைக்கு அணிவித்து பூஜிக்கிறார்கள்.

முல்லைப்பெரியாற்றின் மேற்கு கரையில் அமைந்த கோயில் இது. காசியில் கங்கை நதி தெற்கிலிருந்து, வடக்கு திசை நோக்கி ஓடுகிறது. இதன் கரையில் கோயில் கொண்டுள்ள காலபைரவர், மிக விசேஷமான மூர்த்தியாக வழிபடப்படுகிறார். இதைப்போலவே இங்கும் பெரியாறு நதி, உத்தரவாகினியாக வடக்கு நோக்கி ஓடுகிறது.

இதனால் இக்கோயிலில் உள்ள பைரவரும், சிறப்பான மூர்த்தியாக வழிபடப்படுகிறார். செய்த பாவத்திற்கு மன்னிப்பும், முக்தி கிடைக்கவும் இவரிடம் வேண்டிக்கொள்ளலாம். ஜாதகத்தில் நட்சத்திரம், ராசி தோஷம் உள்ளவர்களும், நிலம், பூமி தொடர்பான பிரச்னை உள்ளவர்களும் வாஸ்து, சூரிய ராசி சக்கரங்களின் கீழ் நின்று சிவனை தரிசித்துச் செல்கிறார்கள்.

பஞ்சபூத தலங்களில் காளஹஸ்தி, வாயு தலமாக இருக்கிறது. இதேபோல இத்தலத்தில் சிவன், வாயு அம்சமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே இவருக்கு, "வாயுலிங்கேஸ்வரர்' என்ற பெயரும் உண்டு. வாயுவை தொடமுடியாது என்பதால் இவரை "தீண்டாத்திருமேனியன்' என்றும் அழைக்கிறார்கள்.

வேடுவரான கண்ணப்பருக்கு காளஹஸ்தியில் சிவன் முக்தி கொடுத்தருளினார். இந்த நிகழ்வின் அடிப்படையில் இங்கு கண்ணப்பருக்கு சன்னதி இருக்கிறது. கையில் ருத்ராட்ச மாலை, அம்பு, வில்லுடன் காட்சி தருகிறார் இவர்.

சிவராத்திரியன்று இரவில் காளத்தீஸ்வரர், கண்ணப்பர் இருவருக்கும் விசேஷ பூஜை நடக்கும். கண் தொடர்பான நோய் உள்ளவர்கள் இவ்விருவருக்கும் வஸ்திரம் அணிவித்து, சர்க்கரைப்பொங்கல் நைவேத்யம் படைத்து வழிபடுகிறார்கள். கோயில்களில் பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டாதேவி ஆகிய சப்த மாதர்களையே தரிசித்திருப்பீர்கள். ஆனால் இக்கோயிலில் "அஷ்ட மாதர்களை' (எட்டு அம்பிகையர்) தரிசிக்கலாம்.

ஆதிசக்தியிலிருந்து ஏழு அம்சங்களாக ஏழு தேவியர் தோன்றினர் என்றும், அவர்களே சப்தமாதர்களாக அருளுகின்றனர் என்றும் தேவி பாகவதம் குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் இங்கு ஆதிசக்தியின் வடிவமாக காளிதேவியும், சப்த மாதர்களுடன் சேர்ந்து காட்சி தருகிறாள்.

இவர்களது தரிசனம் விசேஷ பலன் தரக்கூடியது. மடியில் வீணையை வைத்து இரண்டு கைகளாலும் மீட்டியபடி காட்சி தரும் சரஸ்வதி, இங்கு இடது கையில் வீணையைப் பிடித்தபடி காட்சி தருகிறாள். வலது கையில் அட்சர மாலை வைத்திருக்கிறாள். இத்தகைய அமைப்பில் சரஸ்வதியைக் காண்பது அரிது.

பிரகாரத்தில் குபேரர், ஐஸ்வர்ய லட்சுமியுடன் தனிச்சன்னதியில் காட்சி தருகிறார். இவர்களுக்குப் பின்புறம் மகாலட்சுமியும் இருக்கிறாள். அட்சய திரிதியையன்று குபேரருக்கு விசேஷ பூஜைகள் நடக்கும். குடும்பத்தில் ஐஸ்வர்யம் உண்டாக இவருக்கு திரிதியை நாட்களில் விசேஷ பூஜை செய்து வேண்டிக்கொள்கிறார்கள்.

கோயில்களில் ராகு, கேது இருவரும் நவக்கிரக மண்டபத்தில்தான் காட்சி தருவர். திருநாகேஸ்வரத்தில் ராகுவும், கீழப்பெரும் பள்ளத்தில் கேதுவும் தனிச்சன்னதிகளில் காட்சி தருகின்றனர். இத்தலத்தில் அடுத்தடுத்த சன்னதிகளில் இவ்விருவரும் மனைவியருடன் அருளுகின்றனர்.

இவர்கள் இருவரும் சுயரூபத்துடன் இருப்பது மற்றொரு சிறப்பு. ஆவுடையாருடன் கூடிய சதுர பீடத்தில் ராகு, சிம்ஹிகையுடனும், கேது, சித்ரலேகாவுடனும் காட்சி தருகின்றனர். இவர்களது சன்னதிக்கு தனித்தனி துவாரபாலகர்களும் இருக்கின்றனர். ஏழு நாக தேவதைகளும் இவரது சன்னதியில் சுதை சிற்பமாக வடித்துள்ளனர்.

சுவாதி நட்சத்திர நாட்களில் இவர்களுக்கு விசேஷ பாலபிஷேகம் செய்கின்றனர். ஞாயிறு தோறும் ராகு காலத்தில் (மாலை 4.30 6 மணி) இவர்களது சன்னதியில், "சர்ப்பதோஷ பரிகார ஹோமம்' நடக்கிறது. நாக தோஷம் உள்ளவர்கள் இந்த பூஜையில் கலந்து கொண்டு, ராகு, கேதுவை தரிசித்தால் தோஷம் நிவர்த்தியாகும் என்கிறார்கள். ராகு, கேது பெயர்ச்சியின்போது இவர்களது சன்னதியில் ஹோமத்துடன் பரிகார பூஜையும், திருக்கல்யாண வைபவமும் நடக்கிறது.

நவக்கிரகங்களில் சனீஸ்வரருக்கு கருப்பு நிறம் உகந்தது. எனவே இந்த நிறத்திலான வஸ்திரத்தையே அணிவித்து வழிபடுவர். ஆனால், இக்கோயிலில் சனீஸ்வரருக்கு, பச்சை நிற வஸ்திரத்தை அணிவிக்கிறார்கள். கல்விக்கு அதிபதியான புதனுக்குத்தான், பச்சை வஸ்திரம் அணிவிப்பர்.

ஆனால் கல்வியில் சிறப்பிடம் பெற சனீஸ்வரருக்கு, இவ்வாறு பச்சை வஸ்திரம் அணிவிக்கும் வழக்கம் இருக்கிறது. காளத்தீஸ்வரர் கோயிலுக்கு வெளியில் விஷராஜா இருக்கிறார். இவருக்கு சன்னதி கிடையாது. இவரது சிலையைச் சுற்றி சிறிய சுவர் மட்டும் இருக்கிறது. இவர் மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் இங்கு வரும் பக்தர்களுக்கு அருளுவதாக ஐதீகம்.

பாம்பு மற்றும் விஷ பூச்சிகளால் கடிபட்டவர்கள் பவுர்ணமியன்று இவருக்கு வஸ்திரம் அணிவித்து, பாலபிஷேகம் செய்வித்து, அங்கப்பிரதட்சணம் செய்து வேண்டிக்கொள்கிறார்கள். முருகன் சன்னதி எதிரில் நவவீரர்கள் இருக்கின்றனர்.

கோபுரத்தை அடுத்து சூரியன், சந்திரன் இருவரும் தாமரை மலர் மீது மனைவியருடன் காட்சி தருகின்றனர். நரசிம்மர் இல்லாத சரபேஸ்வரரை இங்கு தரிசிக்கலாம். செவ்வாய் கிழமை ராகு காலத்தில் இவரை வழிபட்டால் விசேஷ பலன்கள் கிடைக்கும் என்கிறார்கள்.

நாக தோஷம் உள்ளவர்கள் இங்குள்ள நாகருக்கு தாலி அணிவித்து, மஞ்சள் அபிஷேகம் செய்து வழிபடுகிறார்கள். கோபுரத்தின் கீழே நந்திதேவர், மனைவியுடன் இருக்கிறார். வீணா தட்சிணாமூர்த்தியை, இங்கு உற்சவமூர்த்தியாக தரிசிக்கலாம். இத்திருக்கோயில் தொடர்பு எண்: +91-4554-265419

# கடந்தகால ஆசைகளே நிகழ்கால இயல்புகளை உருவாக்குகின்றன

27 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் கூறுகிறார்: “ஒரு மனிதனில் உள்ள இயல்பின் ’மூலம்’ எது? இந்தப் பிறவியிலோ அல்லது ஒரு முற்பிறவியிலோ அவன் ஏற்படுத்திக்கொண்ட ஓர் உணர்வுபூர்வமான ஆசையேதான். உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் ஒருவேளை நீங்கள் நம்பாவிட்டால், மனிதர்களின் நிலைமைகளிலும் திறமைகளிலும் உள்ள முரண்பாடுகளைப்பற்றி எந்தத் திருப்திகரமான விளக்கத்தையும் தருவது நிச்சயமாக உங்களுக்கு இதம் அளிக்காது. பிறகு நீங்கள் உங்கள் முன்னோர்களின் ஆசைகளே பரம்பரை இயல்புகளாக உங்களுக்குள் படிந்துள்ளதாக குறை கூறவேண்டியிருக்கும். இந்த, பின்னருள்ள விளக்கம் நிச்சயமாக முழு திருப்திகரமானதாக இல்லை.

மேலும் அவர் அருளுகிறார்: “நாம் என்னவாக மாறவேண்டுமோ அதற்கான விதைகள் தங்கியிருக்கும் நம் அகத்தே மாறுதல் ஏற்பட சாத்தியமே இல்லாமல் போனால் நமது இயல்பின் அறியப்படாத பாகத்தை நம்மால் மாற்றியமைக்க இயலாது. நாம் என்னவாக ஆகவேண்டுமோ அதற்கு தாக்கத்தை ஏற்படுத்த நமக்கு வாய்ப்பு இருக்கின்றது.

நமது இந்த அறியப்படாத பாகத்தின் வளர்ச்சியை தூண்டிவிடுவதோ அல்லது முடக்கிவிடுவதோ ஆரம்பகால பயிற்சிகளை அதிகமாகப் பொறுத்திருக்கிறது.

விதைகள் தங்களுடைய முளைதூதுவர்களை வெளிவிடும்பொழுது உரமிடுதல், களைபறித்தல், நிலத்தைப் பண்படுத்துதல், நீர்பாய்ச்சுதல், பாதுகாப்பு வேலி அமைத்தல் ஆகியவற்றை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். நாம் தேவையற்ற வளர்ச்சியை கழித்து முழுவதுமாக களைந்தெறியவேண்டும். நம் வாழ்க்கைத் தோட்டத்தின் பழங்களை வளர்ப்பதில் நாம் எவ்வாறு கவனம் செலுத்துகிறோம் என்பதைப் பொறுத்து அவை பெரியதாகவோ, சிறியதாகவோ அல்லது நடுத்தரமாகவோ, ஆரோக்கியமாகவோ அல்லது நோயுற்றோ இருக்கும் அதே அளவுதான் மனித சுதந்திரத்தின் வாய்ப்பிற்குள்ளும் அடங்கியுள்ளது. நாம் நம்முடைய சுதந்திர விருப்பத்தேர்வு செயல்களை சிறந்தமுறையில் பயன்படுத்தினால், வெளிப்புற பலன்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். மேலும் நம் இயல்பின் அறியப்படாத பாகத்தின் புதிய, இன்னும் சிறந்த விதைகள்கூட சேகரிக்கப்படுகின்றன. அவை முறையே வாழ்க்கையின் எதிர்காலத்தில் தெரிந்த வெளிப்பாடுகளை நிர்ணயிக்கின்றன.”

மேற்கண்டவை சம்பந்தமாக எனது கருத்தினைக்கூற விரும்புகிறேன்.

குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் கூறியதுபோல், இப்பிறவியில் சின்னசின்ன ஆசைகள் இருந்தாலும் பூமியில் பிறக்கநேரும். எண்ணங்களாலும் பூமியில் பிறக்க நேரும். எண்ணங்களும் ஆசைகளுக்கு ஒப்பானவைதான்.



எல்லாம் மனதிலிருந்த்துதானே உருவாகிறது. எனவே, அனைத்திற்கும் மனம்தானே காரணம்! எவ்வாறான எண்ணங்களாகின்ற விதைகளை விதைக்கவேண்டும் என்றும் அவற்றை எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். அதைப் பார்க்கையில் எப்படிப்பட்ட எண்ணங்களும் ஆசைகளும் குணங்கள்ஒரு மனிதனில் இருக்கவேண்டும் என்பதை குருதேவர் தெளிவுறக் கூறியுள்ளார். ஒரு சிறு உதாரணம், ஒருவன், தான் வாழ்ந்துகொண்டிருந்த இடத்தைவிட்டு மற்றோர் இடத்திற்குச் சென்று வாழ்வதற்கான வாய்ப்பு வந்துள்ளது என்று வைத்துக்கொள்வோம். அவனுடைய எண்ணம் முழுவதும் அவன் தற்போது வாழும் இடத்தைவிட முன்னர் அவன் வாழ்ந்த இடம், வீடு, கல்விகற்ற பள்ளி, விளையாடிய மைதானம் என்று பலவற்றை மனதில் நிறைத்து அதன் ஆழ்ந்த நினைவுகளுடன் அவன் புது இடத்தில் வாழ்ந்துகொண்டிருப்பான். பழைய இடத்தை அவன்நேசித்தவாறுபுது இடத்தில் வாழ்ந்துகொண்டிருப்பான்.

மீண்டும் அவன் அந்த பழைய இடத்திற்குச்சென்று வாழமுடியாவிட்டால், அதாவது இப்பிறவியில் அந்த ஆசை நிறைவேறாமல் போனால் அவனுடைய மனம் பழைய இடத்திலேயே பழைய எண்ணங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும். அதனால் மறுபிறவியில் அவன் அங்கே சென்றுவாழ்வதற்கான வாய்ப்புகள் அவனைத் தேடிவருகின்றன. அதாவது அவன் பழைய இடத்தில் பிறவியெடுக்க நேரும் என்பது பொருள். அல்லது அதன்பின்னர் அங்கே சென்று வாழ நேரும். அதற்குக் காரணமாக இருப்பது அவனுடைய மனம்தான். ஒருமுறை விட்டுவந்த இடத்தை அல்லது பொருளை முற்றிலுமாக விட்டுவரவேண்டும். பின்னர் அவற்றைப்பற்றி நினைக்கக்கூடாது. அதாவது அவ்விடத்தில் இறுதிநாள்வரை வாழ்வதற்குக் கொடுத்துவைக்கவில்லையே என்று நினைக்கக்கூடாது. ஏதோ ஒரு பிறவியிலுள்ள கர்மாவால் அவ்விடத்தில் வாழ நேர்ந்தது என்றுதான் நினைக்க வேண்டும்.

அனைத்திற்கும் நாம்தான் காரணம். இறைவன் எங்கே வாழவைக்கின்றானோ அங்கே வாழவேண்டும்; எந்தச் செயலைச் செய்யவைக்கின்றானோ அந்தச்செயலைச் செய்யவேண்டும். அவன் எதைத் தருகின்றானோ அதைமட்டும் பெறவேண்டும். அதற்கு மேல் எதையும் ஆசைப்படக்கூடாது. எதையும் இறைவனுக்காகவே செய்யவேண்டும். அவனுக்காகவே வாழவேண்டும். பழைய விஷயங்கள் நன்மையோ தீமையோ அவற்றிற்கு மீண்டும் மனதில் இடம் கொடுக்கவேண்டாம்.

அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் ‘பற்று’ எனப்படும் மனதின் வியாதியால் மனம் மயங்கி மாயை எனும் வலைக்குள் சிக்கிவிடும். அவை நிறைவேறாத ஆசைகளாகிவிடுகின்றன.

குருதேவர் கூறுவதுபோன்று அவற்றைவிட எவ்வளவோ உன்னதமானவை உள்ளன. அவற்றை நாம் தேர்ந்தெடுத்து அவற்றில் மனமாகின்ற வேரினை ஊன்றவேண்டும். இறைவன் எங்கெல்லாம் வாழ நம்மை அனுமதிக்கிறானோ அங்கெல்லாம் வாழ்ந்து, அவ்வப்போது இறைவன் நமக்களிக்கும் கடமைகளை சரிவரச்செய்து வாழ்ந்துவிட்டு அம்மண்ணிலுள்ள நம் வாழ்வின் எண்ணங்களை அத்துடன் முறியடித்து விடவேண்டும். ஏனென்றால் எதுவுமே நமக்குச் சொந்தமானதன்று. ஏதோ ‘நம் கர்மாவை அனுபவிப்பதன்பொருட்டு வந்துள்ளோம்’ என்ற உணர்வுடன் வாழவேண்டும். அதேபோன்று எதிர்கால வாழ்வையும் கற்பனை செய்யக்கூடாது. எப்பொழுது ஒருவனுக்குஇவ்வுலகவாழ்வு சம்சாரவாழ்வு தகுதியற்றதாகிவிடுகிறதோ

அதாவது விருப்பமற்றதாகிவிடுகிறதோ அப்பொழுதிலிருந்தே அவன் உள்நோக்கிச் செல்லவேண்டும். அதில் இந்த உலகியலான வாழ்விற்கு மேலான ஒருவாழ்வு உள்ளதை இறைவன் அவனுக்கு உணர்த்துவான். அவன், 'தான் யார்?' என்று கண்டறிவதற்காக உள்நோக்கிப்பயணம் செய்வான். அதற்காக அவன் இறைவனின் சாம்ராஜியத்தில் வாழ்வதாகக் கற்பனை செய்யத்தொடங்குவான். இவ்வாறு இறைவனையும் இறைவனின் சாம்ராஜியத்தையும் தேடித்தான் நாம் ஒவ்வொருவரும் அடியெடுத்து வைக்கவேண்டும். அதற்கு ஒரே வழி இறைவனை நேசித்தலும் அவனுக்குப் பிடித்தமான சேவையைச் செய்தலுமாகும். அவனை நேசிக்கத் தொடங்கினாலே சிறிதுசிறிதாக உலக ஆசைகள் குறைய நேரும். அதற்குப் பதிலாக இறைவனுடன் வாழவேண்டும் என்ற எண்ணம் மனதில் வேரூன்றத் தொடங்கும். மனமாகின்ற கோட்டைக்குள் இறைவனுடைய சாம்ராஜியத்தை நிர்மாணித்து அவனுடைய 'பேரன்பா'கின்ற அரண்மனைக்குள் அவனுடன் இணைந்து வாழ்வதே உண்மையான வாழ்க்கையாகும். அது கற்பனையான வாழ்வானாலும் காலப்போக்கில் அது உண்மையாகிவிடும்.!

இறைவனின் சாம்ராஜியத்தில் வாழ்வதென்பது சாதாரண விஷயமன்று. இறைவனுக்கு நாம் பிரியமானவர்களாக, இறைவன் நம்மை விரும்பும்படியாக இறைவிதிமுறைகளை மீறாமலும் சேவை மனப்பான்மையுடனும் இருக்கவேண்டும். இறைவன் விரும்பும்படியான வாழ்க்கையைத்தான் மனிதன் வாழவேண்டும். நாம் ஒவ்வொருவரும் சுயகட்டுப்பாட்டுடன் வாழ்வது மட்டுமின்றி, சுயஆராய்வின்மூலம் தன் தவறுகளை சரிசெய்தல் போன்ற குணம் உடையவராக இருக்கவேண்டும். அனைத்திற்கும் மேலாக இறைவனைக் கண்டறிவதே குறிக்கோளாக இருக்கவேண்டும். அப்பொழுது சேவைமனப்பான்மை போன்ற மற்ற நல்ல குணங்கள் அனைத்தும் தானாகவே வந்துவிடும்.

இவ்வுலகில் வாழும் இறைவனை உணர்ந்த ஒருவன் தமக்குப் பாதுகாப்பு இறைவனைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை அறிவான். ஒருவன் இறைவனை எவ்வளவுக்கெவ்வளவு தன்னுடன் வைத்துக்கொள்கிறானோ, அவனை எவ்வளவுக்கெவ்வளவு நேசிக்கிறானோ, அவனுக்காக மட்டும் வாழ்கிறானோ தன்னுடைய வாழ்க்கையிலுள்ள அனைத்து கடமைகளையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து, அனைத்தையும் இறைவனுக்காகச் செய்து வாழ்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் இந்த உலகபந்தங்களிலிருந்தும் உலக ஆசைகள் அனைத்திலிருந்தும் விடுவிக்கப்படுகிறான். விடுவிக்கப்படுவது மட்டுமின்றி அழிவுற்ற இந்த மாயை உலகம் அவனை எந்த விதத்திலும் தொடாமல் இறைவன் பாதுகாத்துக்கொள்கிறான்.

இறைவனால் படைக்கப்பட்டதுதான் இந்த உலகமும், உலகநாடுகளும் நாடுகளிலுள்ள குடும்பங்களும், குடும்பத்திலுள்ளவர்களும் தமது குடும்பங்களை பாதுகாப்பதற்காகவும் குடும்பம் செழிப்பதற்காகவும் உழைக்கின்றனர். அதனால் பணம் ஈட்டி உணவு, கல்வி, இருப்பிடம் போன்ற முக்கிய தேவைகளை பூர்த்தி செய்துகொள்கின்றனர். இது சம்சாரம் அல்லது லௌகீகம் ஆகும். இறைவனுக்கு இரு பகுதிகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் லௌகீகம்.

மற்றொரு பகுதியான ஆன்மீகம்இறைவனை அறிவதற்காகவும் அவனை அடைவதற்காகவும் உள்ளது. குடும்பம் முன்னேறுவதற்காக உழைப்பதுபோன்று ஆன்மீகத்தில் முன்னேற்றமடைவதற்காக உழைக்கலாமல்லவா! குடும்பத்திலுள்ளவர்களில் யாருக்காவது எதாவது பிரச்சனை ஏற்பட்டால் அதிலிருந்து அவனைக் காப்பாற்ற முயல்கின்றனர் அல்லவா. காப்பாற்றவும் செய்கின்றனர். அதே போன்று இந்த மாயை உலக வாழ்க்கையிலிருந்து ஒவ்வொருவரும் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதுடன் உடனிருப்பவர்களையும் காப்பாற்றிக்கொள்ளலாமல்லவா! மிகவும் முக்கியமான பொருள் பரம்பொருள் (இறைவன்) என்பதும் அவனை அடைவதே ஒவ்வொரு மனிதனுடைய குறிக்கோள் என்பதும் தான் உண்மை. அவ்வாறிருக்கையில் ஏன் ஒவ்வொரு குடும்பத்தினரும் இறைவனைத் தேட முயற்சிக்கக்கூடாது? தன் குடும்பத்தினருக்கு இறைவனைத் தேடுவதற்கு கற்றுத்தரக்கூடாது? இறைவனிடத்தில் செல்வதே நம்மைக் காப்பாற்றிக்கொள்வதாகும்.

இறைவனை அறிந்தால் அவனை அடைவதற்கான வழியை அவனே காட்டுவான். அவனை அடைவதே இந்த மாயை உலகிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்வதாகும் அதுவே. நமக்குக் கிடைக்கும் விடுதலையாகும். மீண்டும் மீண்டும் பூமியில் பிறவியெடுத்துவந்து கர்மாவை அனுபவிப்பதைவிட இறைவனை சரணடைந்து அவனிடத்தில் அடைக்கலம் தேடலாமல்லவா!. அது சாலச்சிறந்ததல்லவா! அதற்கு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் தன்னை இறைவனிடம் சேர்ப்பதன் பொருட்டு முயற்சிக்கலாமல்லவா! பின்னர் தன் குடும்பத்தினரையும் இறைவனுடன் சேர்க்க பிரயத்னம் செய்யலாமல்லவா! குடும்பத்தலைவன் சம்பாதிக்கின்ற சொத்தும் பணமும் தன் குடும்பத்திற்கு சொந்தமாகிறது. அதுபோலவே இறைவனும் நமக்குச் சொந்தமானவன்; அவன் நம்முடைய அழியாத சொத்து. அதைத் தேடிப்பெறலாமே! ஏனென்றால் இவ்வுலகம் ஒருபோதும் நமது வீடல்ல. அது நமக்கு எப்பொழுதும் சொந்தமல்ல. என்றைக்காவது ஒருநாள் இவ்வுலகைவிட்டுச் செல்லத்தான் வேண்டும். அது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அதைவிடுத்து இவ்வுலகையே உடும்புப்பிடியாக பிடித்துக்கொள்கின்றனர் மனிதர். குடும்பத்தில் ஒருவர் ஆன்மீகத்தில் முன்னேறினால் அதாவது இறைவனை அறிந்தால் அவ்வழியை தன்னுடன் இருப்பவர்களுக்கும் பிறருக்கும் சரியாகக் காட்டலாமல்லவா!. சம்சாரத்தை வழிநடத்திச் செல்வதுபோன்று ஒழுக்கநெறிமுறைகளையும் தியானத்தையும் அது சம்பந்தப்பட்டவற்றையும் கற்றறிந்து உடனிருப்பவர்களுக்கும் கற்றுத்தரவேண்டும். சம்சார வாழ்க்கைக்கு ஒழுக்கம் மிக முக்கியம். அது ஆன்மீகப்பாதைக்கே அழைத்துச் செல்லும். ஒழுக்கம் கலைந்துபோனால் வாழ்க்கை நரகம் என்று மகான்கள் கூறுகின்றனர். உண்மையும் அதுவே! ஒழுக்கத்தைக் கடைபிடிப்பது மிகவும் அவசியம். உடல் ஒழுக்கம், மன ஒழுக்கம், சொல் ஒழுக்கம் மற்றும் செயல் ஒழுக்கம் ஆகியவற்றை முக்கியமாகக் கடைபிடிக்கவேண்டும். இவற்றை குடும்பத்திலுள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். இதை குடும்பத் தலைவனும் செய்யலாம். அல்லது குடும்பத்தில் யாராவது ஒருவர் செய்யலாம்.

அதற்குண்டான வழிமுறைகள் அனைத்தையும் குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் கூறியுள்ளார்; இன்னும் கூறிக்கொண்டுதான் இருக்கின்றார். அவற்றைக் கடைபிடித்துச் செயல்பட்டால் ஒவ்வொரு குடும்பமும் மிகவும் எளிதில் இறைவனடி சேரலாம். சம்சார வாழ்க்கையில் குடும்பம் முன்னேறுவதற்காக எவ்வளவு செயல்படுகிறார்களோ அதற்குச் சமமாக இறைவனை அடையவேண்டும் என்ற ஈடுபாட்டுடனும் இறைவனிடத்தில் விசுவாசத்துடனும் அவனை ஆழ்மனதால் நேசித்தும் வாழ்ந்தால் அமைதியான வாழ்க்கையை இறைவன் அருளுவான். அதிலிருந்து முன்னேறிய பின்னர் இறைவனை அடைவதற்கான வழி யை அவனே காட்டுவான். இறைவனை அடைவதன் பொருட்டான முன்னேற்றத்தை நமக்கு இறைவன் அளிப்பான். பின்னர் இதுதான் வழி என்பதை இறைவன் உணர்த்துவான். அனைவரும் இறைவனாகின்ற பெருங்கடலில் இறங்குவோம் !!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...




# சாபங்களை எளிதாக கண்டறியவும்... சாபங்கள் நீங்கஎளிய வழிமுறைகளும்...

சாபம் என்பதை பல வகையாக கூறலாம், ஒருவருக்கு நாம் செய்யும் தீமையால் பாதிக்கப்படும் நபர் மனவெறுப்புடன் கூறும் அனைத்தும் சாபமாகும். இந்த சாபங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கெடுதலை உண்டாக்கு. இதன் பாதிப்பு பல பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் மற்றவர்களின் சாபத்திற்கு ஆளாகாமல் இருக்கவேண்டும் என்பதால், நமது முன்னோர் பல்வேறு நல்ல வழிமுறைகளை வகுத்து கொடுத்துள்ளனர்.

முன்னோர்களின் வழிமுறைப்படிவாழ்ந்த மனிதனின் தற்போதைய நாகரீக வளர்ச்சி காரணமாக ஒருசிலவற்றை கடைபிடிக்க முடியாமல் நாம் செய்யும் செயல் மற்றவருக்கு தீமையாகவே அமைந்து விடுகின்றன.

இதில் அறிந்து பெற்ற சாபம், அறியாமல் பெற்ற சாபம் என்று சாபங்கள் பல வகைகளில் பரிமாணவளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறது. இதில் ஒருசில சாபங்களை நிவர்த்தி செய்ய ஒருசில பரிகாரங்களையும் நமது முன்னோர் வகுத்துள்ளனர்.

அதன்படி, ஒவ்வொரு சாபத்திற்கும் ஒவ்வொரு விதமான வழிபாடு உண்டு. நமது ஜாதகப்படி ஆராய்ந்து பார்த்து எந்த விதமான சாபம் உள்ளதோ அதற்கேற்ற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒருசிலருக்கு வயது அதிகமாகியும் திரு மணம் கைகூடி வந்திருக்காது. அவர்களுக்கு முன்னோர்கள் சாபத்தினால் தடை ஏற்படுகிறது என்று சொல்வர். ஒரு சிலருக்கு குடும்பத்துடன் ஆரோக்கியப் பாதிப்புகள் வந்து கொண்டேயிருக்கும். யாருடைய சாபமோ என்று சொல்வர். ஒருசிலருக்கு கோபம் வந்தால் உடனே சாபம் விடுவர்.

கற்றறிந்த பெரியவர்கள், வயோதிகர்கள் விடும் சாபம் சிலரை பாதிக்கலாம். எனவே தான் பிறர் கோபப்படும்படி நாம் நடந்து கொள்ளக்கூடாது என்று கூறுவார்கள். அங்ஙனம் ஏற்படும் சாபங்கள் விலக இறை வழிபாடுதான் தீர்வு.

அதேசமயம், தந்தையின் சாபம் விலக, பிரதமை திதியில் சண்டிகேஸ்வரருக்கு சாந் திப் பரிகாரம் செய்ய வேண்டும். தாயின் சாபம் விலக, ஏகாதசி திதியில் ஏகாம்பரேஸ்வரரை முறையாக வழிபாடு செய்ய வேண்டும்.

சகோதர சாபம் விலக, அஷ்டமி திதியில் நந்திகேஸ்வர வழிபாடு செய்ய வேண்டும். சுமங்கலி பெண்களின் சாபம் விலக, அதிகார நந்தியை திருதியை திதியில் வழிபாடு செய்ய வேண்டும். ஆசிரியர் சாபம் விலக சப்தமி திதியில் துவார பாலகர்களை வணங்க வேண்டும்.





## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# கடன் தொல்லை தீர்க்கும் செவ்வாய் அஷ்டமி விரதம்

செவ்வாய்க்கிழமையில் வரும் அஷ்டமி அன்று பைரவரை வழிபாடு செய்தால் கடன் தொல்லை தீரும், மன அமைதியோடு, குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும்.

பொதுவாக அஷ்டமியில் பைரவரை விரதமிருந்து வழிபடுவது சிறப்பானது என்றாலும், அந்த அஷ்டமி தினம் செவ்வாய்க்கிழமையில் வருவது கூடுதல் சிறப்பானதாகும். அன்றைய தினம் பைரவரை வழிபாடு செய்தால் கடன் தொல்லை தீரும். மன அமைதியோடு, குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தடைபட்ட சுப காரியங்கள் இனிதே நடந்தேறும்.

மேலும் செவ்வாடை சாத்தி, சிவப்பு அரளிப்பூ மாலை சூட்டி, வெல்லம் கலந்த பாயசம், உளுந்து வடை, பால், தேன், பழம் நிவேதனம் செய்து, வெள்ளை பூசணிக்காயில் நெய் விட்டு தீபம் ஏற்றி விபூதி அபிஷேகம் செய்து வழிபட்டால் சகல யோகங்களும் வந்து சேரும்.

இதே போல் வெள்ளிக்கிழமையில் வரும் தேய்பிறை அஷ்டமியும் பைரவருக்கு மிகவும் உகந்த நாள். அன்றைய தினம் பைரவரை வணங்குவதால் லட்சுமி கடாட்சம் பெருகும்.





## பயமும் மறதி போக்க...

சிலருக்கு எதைக்கண்டாலும் பயமும், மறதியும் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையை பின்பற்றி வரலாம்.

முதலில் ஒரு நோட்டு புத்தகத்தை எடுங்கள். “சிவாயநம” “ஓம் நமசிவாய” ஓம் சக்தி என்பவற்றில் ஒன்றை 108 தடவை எழுதுங்கள். நீங்கள் பெருமாள் பக்தராக இருந்தால் “ஓம் நமோ நாராயணாய நமஹ, லட்சுமி நரசிம்மம் சரணம் பிரபத்யே” ஸ்ரீராமஜெயம் என்பவற்றில் ஒன்றை இதே போல எழுதுங்கள்.

நீங்கள் எதை மறந்தாலும், இதை மட்டும் மறக்காமல் தினமும் எழுதி விட வேண்டும். முதலில் இது ஞாபக சக்தியை அதிகரிக்கும் பயிற்சி. அடுத்து, இந்த நாமங்கள் பயத்தை போக்க வல்லவை. பயிற்சி மறதியைப் போக்கடிக்கும். ஞாபகசக்தி பயத்தைப் போக்கடிக்கும்.

## 16 தீபங்களை ஏற்றினால் செவ்வாய் தோஷம் விலகும்

திருமணமாகாத பெண்கள் வீட்டில் 16 தீபங்கள் ஏற்றி வழிபட்டால் செவ்வாய் தோஷம் நீங்கி உடனே திருமணம் கைகூடும்.

கார்த்திகை மாதம் செவ்வாய்க்கிழமை வழிபாட்டின் போது நில பிரச்சினை, சொந்த வீடு வாங்குவதற்கான வேண்டுதல்களை நிறைவேற்ற கோரி பூஜை செய்யலாம்.

திருமணமாகாத பெண்கள் வீட்டில் 16 தீபங்கள் ஏற்றி வழிபட்டால் செவ்வாய் தோஷம் நீங்கி உடனே திருமணம் கைகூடும்.

இந்த தீபத்தை ஏற்றும் போது சுவஸ்திக் வடிவில் 16 அகல் விளக்குகளையும் அமைத்து தீபம் ஏற்ற வேண்டும்.



# நவக்கிரக தோஷம் போக்கும் குளியல் முறைகள்




தொகுப்பு: மு.சக்திவேல், Cell:9787576858

### செவ்வாய் தோஷம்:

திருமணத் தடை ஏற்படுவதற்கு செவ்வாய் முக்கிய காரணமாக இருக்கிறது. செவ்வாய் தோஷத்தால் திருமணத்திற்கு பிறகும் கூட ஒரு சிலருக்கு நிறைய பிரச்சினைகள் வந்து சேரலாம். இதற்கு சிறந்த குளியல் பரிகாரம் ஒன்று இருக்கிறது. வில்வம் பழக் கொட்டையை நன்கு பொடி செய்து, குளிக்கும் நீரில் கலந்து குளிக்க வேண்டும். நான்கைந்து குவளை நீரை இதுபோல் குளித்துவிட்டு, பிறகு சாதாரண தண்ணீரில் நீராடலாம். இதனால் செவ்வாய் தோஷம் அகலும்.

### புதன் தோஷம் :

இந்த தோஷம் நீங்குவதற்கு கடல் நீரோ அல்லது கங்கை நீரோ தேவைப்படும். மஞ்சள் மற்றும் கடுகு ஆகிய இரண்டையும் கொஞ்சமாக எடுத்துக் கொண்டு, அதில் தேனை கலக்க வேண்டும். தொடர்ந்து இந்தக் கலவையை சிறிதளவு கடல் நீர் அல்லது கங்கை நீரில் கலந்து கொள்ள வேண்டும். பிறகு நாம் குளிக்கும் நீரில் இதனை கலந்துவிட்டு நீராட வேண்டும். இவ்வாறு செய்தால் புதன் தோஷம் நீங்கும்

### குரு தோஷம்:

கருப்பு ஏலக்காயை நீரில் நன்கு கொதிக்க வைத்து, அதனை குளிக்கும் நீரில் கலந்து குளித்து வருவதன் மூலமாக வியாழ பகவான் என்று அழைக்கப்படும் குருவால் ஏற்படும் தோஷங்கள் நீங்கும்.

### சுக்ர தோஷம்:

பச்சை ஏலக்காயை நீரில் நன்றாக கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் அந்த நீரை, நாம் அன்றாடம் குளிக்கும் நீரில் கலந்து நீராட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக சுக்ர தோஷம் விலகும்.

### சனி தோஷம்:

கருப்பு எள் வாங்கி அதனை நீரில் நன்கு கொதிக்க வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்து வந்தால் சனி தோஷம் நீங்கப்பெறலாம்.

### ராகுகேது தோஷம்:

அருகம்புல்லை, நன்றாக கொதிக்க வைத்து, பின்னர் அதை குளிக்கும் தண் ணீரில் கலந்து நீராட வேண்டும்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033 / 07299992699

**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033
7299992699 / 8939499598



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

# திருமண் அணியும் முறை




சிவபெருமானுக்கு விபூதி பட்டையும், பெருமான் நாமம் அணிந்த பகதர்களை விரைவில் ஆட்கொள்வார் என்று கூறப்படுகிறது.

இந்த வகையில் நாமம் அணிவதற்கும் ஒருசில விதிமுறைகள் உண்டு.

மனிதன் தனது உடலில் 12 இடங்களில் திருமண் அணியவேண்டும் என்று சாஸதிரங்கள் வரையறுத்துள்ளது.

அதேபோன்று உடலில் திருமண் இடும்போது நாராயணனின் பெயரை உச்சரித்தவாரே இட்டுக்கொள்ளவேண்டும்.

## ஸ்ரீமன் நாராயணின் பன்னிரு நாமங்கள்:

ஓம் கேசவாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் மாதவாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் மதுசூதநாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஹ்ருஷிகேசாய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் தாமோதராய நம:

மேற்கண்ட வாறு நாராயணனின் பனிரெண்டு நாமாக்களை குறிக்கும் வகையில் பனிரெண்டு இடங்களில் திருமண் காப்பு இட்டுக்கொள்ள வேண்டும்.

## பன்னிரு இடங்கள்:

நெற்றி
நடு வயிறு (நாபி)
நடு மார்பு (மார்பு)
நடுகழுத்து (நெஞ்சு)
வலது மார்பு
வலது கை
வலது தோள்
இடது மார்பு
இடது கை
இடது தோள்
பின்புறம் அடிமுதுகு
பின்புறம் பிடரி

இவ்வாறு திருமண் காப்பும் ஸ்ரீசூர்ணமும் தரிக்கும்போது சொல்ல வேண்டிய பெருமாள் நாமங்கள்

## பெருமாள் நாமங்கள்:

கேசவாய நம என்று நெற்றியிலும்
நாராயணாய நம என்று நாபியிலும்
மாதவாய நம என்று மார்பிலும்
கோவிந்தாய நம என்று நெஞ்சிலும்
விஷ்ணவே நம என்று
வலது மார்பிலும்
மதுஸூதனாய நம என்று
வலது புயத்திலும்
த்ரிவிக்ரமாய நம என்று
வலது தோளிலும்
வாமனாய நம என்று
இடது நாபியிலும்
ஸ்ரீதராய நம என்று இடது புயத்திலும்
ஹ்ருஷீகேசாய நம என்று
இடது தோளிலும்
பத்மநாபாய நம என்று அடிமுதுகிலும்
தாமோதராய நம என்று பிடரியிலும்
நாமங்களை இட்டுக்கொள்ளவேண்டும்.

# கோபுரம், விமானத்தின் வேறுபாடு

கோவில் கோபுரம், விமானம் இரண்டுக்கும் வேறுபாடு என்ன? அதை பற்றிய விளக்கத்தையும் விரிவாக பார்க்கலாம்.

ஆலயம் என்பதை படுத்திருக்கும் ஒரு மனிதனின் உடலாக எண்ணிக் கொள்ளவேண்டும். மனிதனின் தலை, கழுத்து, மார்பு, தொப்புள், கால்கள், பாதங்கள் இப்படியாக கோயிலின் கர்ப்பக்கிரகம் முதல் ராஜகோபுரம் வரை உள்ளன.

கருவறை விமானம் தலை, அர்த்தமண்டபம் கழுத்து, மகாமண்டபம் மார்பு, இங்கு தான் இதயதுடிப்பு இருப்பது போல நடராஜர் நடன மாடும் சந்நிதி அமைக்கப்படும். தொப்புள் கொடிமரம். ராஜகோபுரம் பாதங்கள். இப்படி இறைத்திருமேனியாக இருக்கும் கோயிலில் கருவறையின் மேலே விமானம் உள்ளது. "மானம்' என்றால் "அளவு',"வி' என்றால் "கடந்தது'. "அளவு கடந்த தெய்வீக சக்தி கொண்டது விமானம்.

கோபுரம் என்பதை"கோ+புரம்' என்று பிரிக்க வேண்டும். "கோ' என்றால் இறைவன். "புரம்' என்றால் "இருப்பிடம்'. இறைவனின் இருப்பிடமே கோபுரம். அதனால் தான் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் அளவுக்கு கோபுரத்தை உயரமாகக் கட்டுகிறார்கள். இதனால் தான் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று சொல்லும் வழக்கம் வந்தது.



# “ஆ(ம)ஹா பாரதம்”

பாகம் 11



ஜரத்தாரு தனக்கு ஏற்ற மனைவியைத் தேடிக் கொண்டிருந்தார், ஒரு நாள் ஒரு காட்டிற்குச் சென்றவர் தனக்குத் தேவையானப் பெண்ணை நினைத்து “யாராவது பிக்ஷையாக கன்னியைத் தரலாம்“ என குரல் கொடுத்தார்.

வாசுகி தன் சகோதரியுடன் அங்கு வந்து “இந்த பிக்ஷையை ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று கூற ஜரத்காரு பெயர் அறியாததால் ஏற்கத் தயங்கினார். பின் “நாகராஜா உன் சகோதரியின் பெயர் என்ன உண்மையைக் கூறு” எனக் கேட்டார்,

என் சகோதரியின் பெயர் ஜர்த்தாரு. இவள் தங்களுக்காகவே காப்பாற்றி வளர்க்கப்பட்டவள். எனவே ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி முனிவருக்கு மனைவியாக அளித்தான். முனிவர் சாஸ்திர முறைப்படி அவளை மணந்தார்.

முன்பு ஒரு காலத்தில் நாக மாதாவான கதரு சர்பங்களுக்கு ஜனமேஜயனின் யாக அக்னியில் பஸ்மமாக வேண்டுமென்று சாபம் இட்டிருந்தார். அந்த சர்பத்திலிருந்து தப்பிக்கவே வாசுகி நன்னடத்தை கொண்ட ஜரத்காருவிற்குத் தன் சகோதரியை மணம் முடித்தார். ஜரத்காரு ஜரத்காரு தம்பதியினருக்கு ஆஸ்தீகன் என்ற மகன் பிறந்தான். அவர் சகல வேதங்களையும் அறிந்த மகானாக இருந்தும் எல்லோரிடமும் சமமாக இருந்தார். பெற்றோர்களின் குல பயத்தை விலக்கி வைத்தார்.



வெகுகாலத்திற்குப் பின் பாண்டவ வம்ச மன்னன் ஜனமேஜயன் சர்பயாகத்தைச் செய்தான்.

அந்த யாகத்திற்கு வந்த ஆஸ்தீகன் தன் உறவினரோடு மற்றும் எல்லா நாகங்களையும் அந்த ஆபத்திலிருந்து விடுவித்தார். இவ்விதமாய் தவம் மற்றும் சந்தான உற்பத்தி மூலம் அவர் தன் பித்ருக்களை உத்தாரம் செய்தார்.

பல யாகங்காலச் செய்து தேவர்களையும், பிரம்மச்சரிய விரதத்தால் முனிவர்களையும், சந்தானம் பெற்றதால் பித்ருக்களையும் திருப்தி செய்து அவர்களின் பாரத்தை இறக்கியவர் கடுமையான விரதங்களைச் செய்து பித்ருக்களுடன் ஸ்வர்க்கம் என்றார். ஆஸ்தீகன் போன்ற புதல்வனையும் பரம தர்மத்தையும் அடைந்து ஜரத்காரு முனிவர் நீண்ட காலத்திற்குப் பிறகு ஸ்வர்க லோகம் சென்றார். வேறு என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

சூதரே! ஆஸ்தீகரின் கதையைக் கேட்க ஆவலாக இருப்பதால் அவரது கதையை விஸ்தாரமாகக் கூறுங்கள் என சௌனகர் கேட்டதும் சூதர் ஆஸ்தீகரின் கதையை விஸ்தாரமாக கூறத் தொடங்கினார்.

முன்பு சத்ய யுகத்தில் தக்ஷப் பிரஜாபதிக்கு கத்ரு ,வினதா என்ற இரு அழகியப் பெண்கள் இருந்தனர். பேரழகு வாய்ந்த அவர்களிருவரையும் கச்யபருக்கு கொடுத்திருந்தார்.

ஒரு நாள் கச்ய்பர் மிக மகிழ்வோடு தன் இரு மனைவியரிடம் உங்களுக்கு விருப்பமானதை கேளுங்கள் என்று கூறினார்.

மனைவியர் இருவரும் மிக மகிழ்ச்சியடைந்தனர். கத்ரு சமதேஜஸ்வியானஆயிரம் நாகங்களைப் புதல்வர்களாகக் கேட்டாள். வினதா பல தேஜஸ்ஸும், வீரமுமிக்க, கத்ரு புதல்வர்களை விடச் சிறந்தவருமான இரு புதல்வர்களைக் கேட்டாள். கச்யபரும் அளித்திட அவ்விருவரும் மிக ஆனந்தமடைந்தனர்.கச்யபர் அவர்கள் விருப்பப்படியே கர்ப்பம் தரிக்கச் செய்து கர்ப்பத்தை பத்திரமாகக் காப்பாற்றும்படி கூறி விட்டு வனத்திற்கு சென்று விட்டார்.



வெகு காலத்திற்குப் பிறகு கத்ரு தனது 1000 முட்டைகளையும், வினதா தனது இரு முட்டைகளையும் பெற்றனர். அதைப் பணிப் பெண்கள் பாத்திரத்திற்குள் பத்திரப்படுத்தி வைத்தனர்.

500 ஆண்டுகளுக்குப் பிறகு கத்ருவின் 1000 முட்டைகளையும் பிளந்துக் கொண்டு புதல்வர்கள் வெளியே வந்தனர். ஆனால் வினதாவின் புதல்வர்கள் வருவதாகவே தெரியவில்லை. கத்ருவின் முன் வினதா இதனால் வெட்கமுடன் இருந்தாள்.

வெட்கிப் போயிருந்தவள் தன் கைகளால் ஒரு முட்டையை உடைத்தாள் .அதில் மேல் பாகம் முழுவதும் வள்ர்ச்சி அடைந்து மீதபாதம் முழுமைப் பெறாத மகனைக் கண்டாள்.

அந்த மகன் கோபமுற்று “ தாயே ! நீ பொறாமையினால் அவசரப்பட்டு என்னை முழுமைப் பெறாத சரீரமுடையவனாக்கி விட்டாய். என்னை வளர விடவில்லை. அதனால் நீ உன் சக்களத்தியிடம் 500 ஆண்டுகள் அடிமையாக இருக்க வேண்டியது “ என சாபம் இட்டு விட்டான்,

அதே சமயம் “அம்மா! இதோ மற்றொரு முட்டையிலுள்ள உனது இரண்பாவது மகன் உனது சாபத்தை போக்கி உன்னை விடுவிப்பான். .அதுவரை நீ ஆத்திரப்பட்டு என்னைப் போல் அவனையும் முடமாக்காமலிருந்தால்தான் இது நடக்கும். நீ பலமுள்ள மகனைப் பெற விரும்பினால் 500 ஆண்டுகள் தைரியமாக இவன் பிறப்பை எதிர்பார்த்து காத்திரு” என்று கூறிவிட்டு வானில் பறந்து விட்டான்.

சௌனகரே! இந்தப் பிள்ளை தான் அருணன். சூரியனுக்கு முன் தோன்றும் செம்மையின் உருவத்தில் நாம் தரிசிப்பது இந்த விந்தாவின் மகன் அருணனை தான். சூரியனுடைய தேருக்கு சாரதியாகி விட்டான் அருணன்.

அதன் பிறகு உரிய நேரத்தில் சர்ப்பங்களை சம்ஹாரம் செய்யும் வீரனாக கருடன் பிறந்தார். பிறந்ததுமே பசியால் வருந்தியவர் பிரம்மா தனக்கென்று நியமித்த ஆகாரத்தைப் பெறும் பொருட்டு தாய் வினதாவை விட்டுவிட்டு வானத்தில் பறந்து சென்று விட்டார்.

அடுத்த இதழில்....

- Thali, Ph:09786223577

# ஒவ்வொருவரின் பக்குவத்திற்கு ஏற்ப கடவுள் அருள்புரிவார்

தன்னுடைய சொற்பொழிவுகளாலும் கருத்துக் களாலும் உலகெங்கும் புகழ் பெறும் முன் சுவாமி விவேகானந்தர் ஒரு திருவோடு ஏந்திய துறவியாக இந்தியா முழுவதும் சுற்றினார்.

இன்றைய ராஜஸ்தான் பகுதியில் அவர் சுற்றிக் கொண்டிருந்த பொழுது நடந்த ஒரு சம்பவம்.

ஆல்வார் நாட்டு திவானான மேஜர் ராம் சந்திரர் சுவாமிஜியைப் பற்றி கேள்விப்பட்டு, தமது வீட்டிற்கு அழைத்தார்.

அந்நாட்டு மன்னரான மங்கள் சிங் ஆங்கில மோகம் கொண்டவராக இருந்தார்.

சிந்தனை, செயல் அனைத்திலும்ஆங்கிலேய பாணியைப் பின்பற்றுவதில் நாட்டம் கொண்டிருந் தார். திவானுக்கு அது பிடிக்கவில்லை. மன்னர் சுவாமிஜியைச் சந்தித்தால் நல்லது என்று எண் ணினார் திவான்.

எனவே அவருக்கு, ஆங்கிலத்தில் அபார அறிவு கொண்ட ஒரு பெரிய சாது இங்கே உள் ளார்' என்று எழுதினார்.

மன்னர் மறுநாளே திவானின் வீட்டிற்கு வந்து சுவாமிஜியைச் சந்தித்தார்.

மன்னர் வந்து சுவாமிஜியை வணங்கி அமர்ந்து பேச்சைத் தொடங்கினார்.

மன்னர்: சுவாமிஜி, நீங்கள் மிகவும் படித்தவர் என்று கேள்விப்பட்டேன். உங்கள் படிப்பிற்கு நீங்கள் கை நிறைய சம்பாதிக்கலாமே !.. ஏன் இப்படி பிச்சையெடுத்துத் திரிகிறீர்கள் ?..

சுவாமிஜி: மகாராஜா, நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமைகள் உங்களுக்கு எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை விட்டு விட்டு நீங்கள் ஏன் வேட்டை அது இதென்று ஆங்கி லேயர்களுடன் நேரத்தைச் செலவிடுகிறீர்கள்?

சிறிதும் தயக்கமின்றி வந்த சுவாமிஜியின் கேள்வி அங்கிருந்தோர் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. மன்னர் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டார்.


aanmeegamalar.com

மன்னர்: ஏன் என்பதற்கு குறிப்பாக எந்த காரணத்தையும் சொல்ல முடியாது. எனக்கு அது மிகவும் பிடித்திருக்கிறது.

சுவாமிஜி: அதுபோல் தான்!.. எனக்கு இது பிடித்திருக்கிறது. நான் பிச்சையெடுத்துச் சாப் பிடுகிறேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மன்னர், ‘சுவாமிஜி எனக்கு உருவ வழிபாட்டில் எல்லாம் நம்பிக்கை இல்லை. என்கதி என்னவாகும்?’ என்று கேட்டார்.

இதைக் கேட்கும் போது அவர் சற்று சிரித்த முகத் துடன் கேலி செய்வது போன்ற தொனியில் கேட்டார்.

சுவாமிஜி: ‘நீங்கள் கேலி செய்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.’

மன்னர்: இல்லை சுவாமிஜி, எல்லோரையும் போல், ஏனோ என்னால் இந்த மண்ணையும் மரத்தையும் கல்லையும் கட்டையையும் வழிபட முடியவில்லை. மறு உலகத்தில் துன்பப்படுவது தான் என் தலை விதியா?’

சுவாமிஜி: ‘நல்லது, ஒவ்வொருவரும் அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப வாழ வேண்டும். அது தான் நல்லது.

இந்தப் பதிலை அங்கிருந்த யாரும் எதிர் பார்க்கவில்லை.

சுவாமிஜி உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள் பவர். அவர் மன்னருக்கு தகுந்த விளக்கம் அளிப்பார் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்து போனார்கள்.

ஆனால் சுவாமிஜி தமது பதிலைக் கூறி விட்டு அந்த அறையைச் சுற்றிப் பார்த்தார். அங்கே தொங்கிக் கொண்டிருந்த ஒரு படம் அவரது கருத்தைக் கவர்ந்தது. உடனே அதனைக் கொண்டுவருமாறு கூறினார்.

சுவாமிஜி: இந்தப் படத்தில் இருப்பது யார்?’

திவான்: அது மன்னரின் படம்.

சுவாமிஜி திவானிடம் அடுத்ததாகக் கூறியது அனைவரையும் அதிர்ச்சியால் உறைய வைத்தது.

சுவாமிஜி : திவான்ஜி, இந்தப் படத்தின் மீது துப் புங்கள்.

அனைவரும் அதிர்ச்சியில் அசைவற்று நின்றனர்.

சுவாமிஜி அதைக் கண்டு கொள்ளாமல் ‘துப்புங்கள் திவான்!’ என்று மீண்டும் திவா னிடம் கூறினார். திவான் அசையவில்லை.

உடனே சுவாமிஜி அங்கிருந்த மற்றவர்களைப் பார்த்து, ‘திவான் இல்லாவிட்டால் இங்கே இருக்கின்ற வேறு யாராவது ஒருவர் முன்வாருங்கள்.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

இந்தப் படத்தில் அப்படி என்ன தான் உள்ளது? வெறும் காகிதம் தானே! இதன் மீது துப்புவதற்கு ஏன் தயங்குகிறீர்கள் ?' என்று கேட்டார்.

அங்கிருந்த மற்றவர்களும் சுவாமிஜி கூறியதைச் செய்ய முன்வரவில்லை. அனைவரும் சுவாமிஜியையும் மன்னரையும் மாறிமாறி பார்த்தபடி திகைத்து நின்றனர். அப்போது சுவாமிஜி மீண்டும் திவானிடம், 'என்ன, அப்படியே நிற்கிறீர்களே! இந்தப் படத்தின் மீது துப்புங்கள்' என்று அழுத்தமாகக் கூறினார். அதன் பிறகும் திவானால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. பதைபதைத்தவாறே நடுங்கிய குரலில்..

திவான்: சுவாமிஜி, என்ன சொல்கிறீர்கள்? சொல்வதைப் புரிந்து கொண்டு தானா சொல்கிறீர்கள்? இது மன்னரின் படம். இதன் மீது என்னால் எப்படி துப்ப முடியும் ? என்று கேட்டார்..

சுவாமிஜி: இருக்கட்டுமே! மன்னரின் படம் தானே, மன்னர் அல்லவே! இந்தப் படத்தில் மன்னர் உயிருணர்வுடன் இல்லையே! இது வெறும் காகிதத் துண்டு. மன்னரின் எலும்போ சதையோ ரத்தமோ இதில் இல்லை! இது பேசுவதில்லை, நடப்பதில்லை, மன்னர் செய்வது போல் எதையும் செய்வதில்லை.

இருந்தாலும் இதன் மீது துப்ப நீங்கள் யாரும் முன்வர மறுக்கிறீர்கள். ஏன்? ஏனெனில் இந்தப் படத்தில் மன்னரின் பிரதி பிம்பத்தை நீங்கள் காண்கிறீர்கள். இதன் மீது துப்பினால் மன்னரையே அவமதிப்பதாக உணர்கிறீர்கள்...

இதனைக் கூறிவிட்டு சுவாமிஜி மன்னரைப் பார்த்து தமது பேச்சைத் தொடர்ந்தார்:

'பாருங்கள் மகாராஜா!

இந்தப் படம் நீங்கள் அல்ல. ஆனால் ஒரு விதத்தில் இது நீங்களே. அதனால் தான் இதன் மீது துப்புமாறு சொன்ன போது உங்களிடம் பக்தி கொண்ட உங்கள் சேவகர்கள் மறுத்து விட்டார்கள். இது உங்கள் பிரதி பிம்பம். இந்தப் படத்தைப் பார்க்கும்போது நீங்களே அவர்களின் நினைவிற்கு வருகிறீர்கள். அதனால் தான் உங்களுக்கு கொடுக்கின்ற மரியாதையை அவர்கள் இந்தப் படத்திற்குக் கொடுக்கிறார்கள்.

கல்லிலும் மண்ணிலும் மரத்திலும் செய்யப்பட்ட தெய்வ வடிவங்களை வழிபடுகின்ற பக்தர்களின் விஷயமும் இது தான்.

அவர்கள் வழிபடுகின்றஉருவம் அவர்களுக்கு அந்த பரம்பொருளை நினைவு படுத்துகிறது. எத்தனையோ இடங்களில் நான் யாத்திரை செய்துள்ளேன்.

எந்த இந்துவும்,

"ஏ கல்லே, உன்னை வணங்குகிறேன். ஓ மண்ணே, எனக்கு அருள் செய்" என்று வழிபடுவதை நான் காணவில்லை.

மகாராஜா!...

எங்கும் நிறைந்த, பேரானந்த வடிவான முழுமுதற் கடவுளையே ஒவ்வொருவரும் வழிபடுகின்றனர். கடவுளும் அவர்களின் பக்குவத்திற்கு ஏற்பஒவ்வொருவருக்கும் அருள் புரிகிறார் என்றார்.

# சகுனம்

## தடுக்கினால் ஏன் தண்ணீர் குடிக்க வேண்டும்....?

நீங்கள் ஒரு முக்கியமான வேலைக்காக வீட்டிலிருந்து அவசர அவசரமாக புறப்படுகிறீர்கள். அந்த சமயம்பார்த்து வாசற்படியிலோ அல்லது கீழே கிடக்கும் ஏதாவது பொருளிலோ இடித்துக்கொள்கிறீர்கள்.

அதுபோன்ற நேரத்தில் நமது வீட்டில் இருக்கும் பெரியவர்கள், "புறப்படும்போதே சகுனம் சரியில்ல. கொஞ்ச நேரம் உட்கார்ந்து தண்ணீர் குடித்து விட்டுப் போ" என்பார்கள்.

இவ்வாறு அன்று பெரியோர்கள் கூறியதற்கு மிகுந்த உள்ளர்த்தம் இருப்பதை நாம் அறியாமல் விட்டுவிட்டோம். அவர்களைப் பார்த்து "போயா இன்னும் அந்த காலத்திலியே இருக்க" என்று ஏளனம் செய்கிறோம்.

இதல் மூடநம்பிக்கை என எதுவுமே இல்லை.

நாம் அவசரமாக புறப்படும் போதே "நிதானத்தில் இல்லை" என தெளிவாகிறது.

நிதானத்தோடு புறப்பட்டு இருந்தால் இடித்து கொள்ள மாட்டோம்...

அப்படி நிதானம் இல்லாமல் செய்யப்போகும் காரியமும் வெற்றி பெறாது. அந்த நேரத்தில் நமது மூளையும் சரியாக சிந்திக்காது.

அதனால்தான் சிறிது நேரம் மூளையை ஆசுவாசப்படுத்த, அரிய மருந்தாக முன்னோர் கண்டுபிடித்தது தண்ணீர். மூளையை ஆசுவாசப்படுத்திக்கொள்ள சிறிது தண்ணீர் குடித்தால் மூளை அமைதி பெறும். பிறகு நம் சிந்தனையும் சரியான விதத்தில் செயல்படும்.

மூளை புது தெம்புடன் திகழும்போது செய்யும் காரியம் வெற்றிபெறும்.




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com





ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# நமச்சிவாய வாழ்க...

## தோன்றிய வரலாறு

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அதில் திருவாசகம் எட்டாம் திருமுறையாகும். சிவனடியார்களில் நாயன்மார்கள் 63பேர். சமயக்குரவர் நால்வர்அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர் ஆவர். திருவாசகம் செந்தமிழுக்கு அன்பு மறையாகவும், உயிர்ப் பிணிக்கு மருந்தாகவும் உள்ளது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவை இறை நிலையை அடைய முக்கிய நிலைகளாக நமது முன்னோர் குறிப்பிட்டுள்ளனர். அந்த வகையில் அப்பர் சரியைக்கும், சம்பந்தர் கிரியைக்கும், சுந்தரர் யோகத்திற்கும், மாணிக்கவாசகர் ஞானத்திற்கும் உரியவராக விளங்குகின்றனர்.

மதுரையைச் சேர்ந்தவர் மாணிக்கவாசகர், இவரின் இயற் பெயர் வாதவூரர், ஏறத்தாழ 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என கணிக் கப்பட்டுள்ளது.

ஆதி சங்கரரைப் போல 32 ஆண்டுகளே வாழ்ந்தார் மாணிக்கவாசகர். வைகைகரையில் திருவாதவூரில் அமாத்தியர் எனும் அந்தணர் மரபில் சம்புபாதசிருதர், சிவஞானவதிக்குப் புதல் வராகத் தோன்றியவர். மன்னன் அரிமர்த்தன பாண்டியனின் முதல் அமைச்சர். தென்னவன் பிரமராயர் என்ற பட்டம் பெற்றவர்.

சோழநாட்டுக் கடற்கரையில் குதிரைகள் வந் துள்ள செய்தி கேட்ட மன்னன், வாதவூரரிடம் பணம் கொடுத்து வாங்கி வரச்சொன்னான். வாத வூரர் வழியில் திருப்பெருந்துறையில் தங்கினார். சோலை ஒன்றில் சிவாகமங்கள், வேதங்கள் ஒலிப்பதைக் கேட்ட வாதவூரர் அங்கே சென்று, சிவனே குருநாதர் தோற்றத்தில் மரத்தடியில் வீற்றிருக்க, கீழே அடியார்கள் கூடியிருக்கும் காட்சியைக் கண்டு, பசுவைத் தேடிய கன்று போல் விரைந்து சென்று காலடியில் வீழ்ந்து வணங்கி, அருள் தர வேண்டினார்.

“அறை கூவி ஆட்கொண்டருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்
உளையா அன்பென்பு உருக ஓலமிட்டு”

என்பார் மாணிக்கவாசகர்.

விண்ணவர் தேவர் மற்றவரிருக்க, குதிரை வாங்க வந்த வாதவூரரைத் திருப்பெருந்துறையில் சிவபெருமான் குருவாய்த் தோன்றி குருந்த மரத்தினடியில் அமர்ந்து தடுத்தாட்கொண்டு, தன் நீள் கழல்களைக் காட்டி ஸ்பர்ச, நயன, மந்திர தீட்சைகளை அளித்து மறைந்தார். வாதவூரரரை இறைவன் ‘மாணிக்கவாசக’ என அன்புடன் அழைத்தார்.

ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்ட, வாதவூரர், பாடிய முதல் அடி

“நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க”

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்க வாசகர் பாடிய முதல் அடி என்பதால் சிவ கடாட் சத்தைப் பெற மேற்கண்ட பதிகத்தை பாடுவதன் மூலம் எளிதாக அடையலாம்.



www.aanmeegamalar.com





# நாசியை கட்டுப்படுத்தும் தண்டம்



முனிவர்களும் சித்தர்களும் எப்போதும் தங்கள் கையில் ஒரு தண்டம் வைத்திருப்பார்கள்.

“தண்டம்“ என்பது மரத்தால் ஆன ஒரு ஊன்றுகோல். ஆங்கில எழுத்து “T” அல்லது “Y” வடிவத்தில் இருக்கும்.

அந்தத் தண்டத்தின் மீது வலது கை அல்லது இடது கையை வைத்து விட்டால், சுவாசம் திசை மாறும்.



வலது நாசி சுவாசத்தை நிறுத்த, வலது அக்குளின் கீழே தண்டத்தை வைத்து அழுத்த வேண்டும். உடனே, இடது நாசிக்கு சுவாசம் தடம் மாறும். இடது நாசி சுவாசத்தை நிறுத்த, இடது அக்குளின் கீழே தண்டத்தை வைத்து அழுத்த வேண்டும். அப்போது வலது நாசிக்கு சுவாசம் தடம் மாறும்.

இது தான் தண்டத்தின் பயன்.

நம் முனிவர்கள் இதற்காக தான் தண்டத்தை சுமந்து கொண்டே திரிந்தார்கள்.

ஆனால், சுவாசத்தை எதற்காக தடம் மாற்ற வென்றும்?

எப்போது தடம் மாற்ற வேண்டும்?

அதாவது, நாம் செய்த காரியம் சரியாக நடக்கவில்லை என்றால், அப்போது எந்த நாசியில் சுவாசம் ஓடுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். உடனே, தண்டத்தை எடுத்து சுவாசம் ஓடும் அந்த நாசிப் பகுதியின் அடியில் வைக்க வேண்டும். உடனே, சுவாசத்தின் தடம் மாறிவிடும். இந்த நிலையில், மீண்டும் அந்த காரியத்தை முயற்சிக்கும் போது, அதுவரை நடக்காமல் இருந்த காரியம் நடந்துவிடும். நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிடும்.

நம் சித்தர்கள் சொல்லிவைத்த விஷயங்களை எப்போது நாமெல்லாம் மூட நம்பிக்கைகள் என்று ஒதுக்கி வைத்து விட்டு, கைகளில் மொபைல் போனையும் லாப்டாப்பையும் நம்ப ஆரம்பித்தோமோ, அப்போதே நம் சித்தர்கள் நம்மை ஒதுக்கி வைத்துவிட்டு காட்டுக்குள் சென்று விட்டார்கள்.

துன்பத்தை இன்பமாக மாற்ற இந்த தண்டம் ஒரு அழகான ஆன்மீகக் கருவி. விதியை மாற்றுவது போன்றது இது. இருந்தாலும், இது சாதாரண காரியம் அல்ல. அதற்கான பொறுமையும் நம்பிக்கையும் விடாமுயற்சியும் நம்மிடம் மிகவும் தேவை.

ஆனால், இதை அவ்வளவு சுலபமாக அடைந்து விட முடியாது. நமக்கு அப்பாற்பட்டு தர்ம நீதி நியாயங்கள் என்று அண்ட சராசரத்தில் நிறைய சட்டங்கள் இருக்கின்றன. அவற்றின் அனுக்கிரகம் வேண்டும். அதற்கு நம்மிடம் பொதுநலச் சிந்தனை, கருணை, இரக்கம், பக்தி, சேவை, சுயநலமின்மை போன்ற பரோபகாரச் சிந்தனைகளும் தகுதியாக இருக்க வேண்டும்.



www.aanmeegamalar.com

# மந்திரம்-எந்திரம்-தந்திரம்

## எளிமையாக அற்புத ஆற்றல் தரும் சக்தி வழிபாடு

இந்து சமயம் என்ற பொதுப் பெயரால் இன்று அழைக்கப்படுகிற நமது சனாதன தர்மத்தில் ஆறு பெரும் பிரிவுகள் உள்ளன. சூரியனை கடவுளாக வழிபடும் சௌரம், சுப்ரமணியனை வழிபடும் கௌமாரம், கணபதியை போற்றி வணங்கும் காணாபத்தியம், சிவனை தொழும் சைவம், திருமாலை மங்களாசாசனம் செய்யும் வைஷ்ணவம், சக்தி தேவியை வணங்கி மகிமும் சாக்தம் என்ற ஆறு பிரிவுகள் மிகவும் பிரபலமானது.

ஒருகாலத்தில் இந்த ஆறு பிரிவுகளும் தனித்தனி மதங்களாக இயங்கி மக்களை வேற்றுமையில் ஆழ்த்தி வந்தது. சனாதன தர்மம் பிரிந்து கிடந்தால் அதற்கு எதிராக அசுர வளர்ச்சி பெற்று வந்த ஜைனம், பௌத்தம் போன்ற மதங்கள் கபலீகரம் செய்துவிடும் என்று அறிவு பூர்வமாக யோசனை செய்து ஆதி சங்கரர் ஆறு பிரிவுகளையும் ஒரே பிரிவுகளாக்கி தனித்தனி வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தினார்.

இந்த ஆறு பிரிவுகளில் எது சிறந்தது எது உயர்ந்தது என்று யாராலும் கணித்துக் கூற முடியாது. காரணம் ஆறு மதங்களின் மிக முக்கியமான நோக்கமே இறைவனை உணர்ந்து அவனது திருவடிகளை சரணடைவது ஒன்றே ஆகும்.



சைவம் வைஷ்ணவம் இவை இரண்டும் பெருவாரியான மக்களால் பாரத தேசம் முழுவதும் பின்பற்றப்பட்டு வந்தாலும் வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு என்ற பேதங்கள் இல்லாமல் எல்லா சமயப் பிரிவு மக்களும் சக்தி வழிபாட்டை ஏற்றுக்கொண்டார்கள் என்று தான் கூறவேண்டும். சைவத்திற்கும் வைணவத்திற்கும் குடுமிபிடி சண்டை வரலாற்று காலத்தில் நடந்தது என்றாலும் கூட, சக்தியை திருமாலின் தங்கையாகவும் சிவனாரின் துணைவியாகவும் இருபிரிவினர்களுமே ஏற்று வழிபட்டார்கள்.

கணபதியை வணங்குபவர்கள் கந்தனை வணங்குபவர்கள் அன்னை சக்தியை புறக் கணித்து விடவே முடியாது. காரணம் கணபதி கந்தன் இரண்டு பேருக்குமே அன்னை அபிராமி தான் பெற்றெடுத்த தாய். எனவே தாயை புறக்கணித்து விட்டு தனயன்களை வழிபட யாரும் துணிய மாட்டார்கள். கண்ணுக்கு நேரே தெரிகின்ற கடவுளாகிய சூரிய பகவான் கூட, சக்தி தேவியின் நெற்றியில் ஜொலிக்கும் திலகமாகி விடுவதால் சௌரம் என்ற சூரிய வழிபாடும் சக்தி வழிபாட்டிற்கு முன்னால் அடங்கி விடுகிறது.

அண்டங்கள் அனைத்தையும் ஆக்கும் சக்தியாக அன்னை பார்வதி தேவியை வழிபடும் தர்மத்திற்கு சாக்தம் என்று பெயர். சாக்த நெறியில் தந்திரம் என்றால் ஆகமம் என்று பொருள்படும். பொதுவாக ஆகமம் என்பது இறை வழி பாட்டை பொறுத்தவரை வரைபடம் போன்றதாகும். இன்ன ஊருக்கு இப்படி செல்லலாம் என்று வரைபடம் காட்டுவது போல ஆகமம் அல்லது தந்திரம் இன்ன தெய்வத்தை இப்படி அடையலாம் என்று கூறுவதாகும்.



மற்ற மத பிரிவுகளை விட சாக்த மதத்தில் எண்ணிக்கையில் அடங்காத ஆகமங்கள் அதாவது தந்திரங்கள் உண்டு. அதனாலேயே காலப்போக்கில் சாக்தத்தை தாந்த்ரீகம் என்று கூறி மக்கள் அழைக்கலானார்கள். தாந்த்ரீகம் என்றால், மந்திரம் எந்திரம் தந்திரம் என்று நிறைய தனித்தனி பிரிவுகள் உண்டு. அது அதற்கான பூஜை விதிகளும் உண்டு. சாதாரணமான மக்களை எளிதில் கவர்ந்து இழுக்கக் கூடிய ஈர்ப்பு சக்தி தாந்த்ரீகத்திற்கு இயற்கையாலுமே உண்டு.

ஒரு மனிதன் நோயில் அவதிப்படுகிறான். அவனை குணப்படுத்த மருந்தும் மருத்துவனும் சக்தி அற்றவர்களாக ஆகிவிட்டார்கள். கடவுள் ஒருவனே தான் அவனைக் காப்பாற்ற வேண்டும் என்று நிர்கதியாக ஒரு ஜீவன் தவிக்கின்ற போது, அவனுக்குக் கைகொடுக்க தாந்த்ரீகம் ஓடிவருகிறது. அயன வெளியில் இருக்கும் சப்த அலைகளை மந்திரங்களாக மாற்றி, பாதிக்கப்பட்டவனின் மூலாதார சக்கரத்தில் உரு ஏற்றி, அவனை நோயிலிருந்து விடுபட வைக்கிறது தாந்த்ரீகம்.

பயிர் வளர்வதற்கும், பள்ளியில் பிள்ளைகள் படிப்பதற்கும், இறந்துபோன தீய சக்திகள் ஓடி ஒளிவதற்கும், தண்ணீர் நிலைகள் விஷமாகிப் போனால் அதைக் காப்பதற்கும் தாந்த்ரீக மந்திரமே துணை வருகிறது. இந்த தாந்த்ரீக மந்திரங்களின் கருவூலமாக அதர்வண வேதம் இருக்கிறது. இதனால் தான், அதாவது மக்களின் துயரங்களை உடனடியாக தீர்க்கும் மார்க்கத்தை தனக்குள் வைத்திருப்பதனால் தான் அதர்வண வேதத்திற்கு மக்கள் வேதம் என்ற பெயர் இருக்கிறது.

தாந்த்ரீகம் வெறும் உடல் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வது அல்ல.

நீ வணங்கும் தெய்வம் எதுவாக இருந்தாலும் அந்த தெய்வத்தின்சுவையோடு உன்னை ஐக்கியமாக்குவதற்கு தாந்த்ரீகம் ஒன்றே முன்வரு கிறது. உதாரணமாக, நீ சிவபெருமானை உணர வேண்டுமென்றால் கர்ம யோகம், ஞானயோகம், தியானயோகம், ராஜ யோகம் என்று எத்தனையோபடித் தரங்களை தாண்டித் தான் வரவேண்டும் என்று சைவம் கூறும். ஆனால் தாந்த்ரீகம், எந்த யோகமும் வேண்டாம்.. நான் உன்னை அழைத்துப் போகிறேன் என்று சிவத்தை சிவனாகவே அனுபவிக்க மனிதனை வைத்துவிடும்.

இதனால் தான் சனாதன தர்மத்தில் மட்டுமல்ல, சனாதன தர்மத்தையே அழித்து ஒழித்து மண்மேடாக்க துடித்துக் கொண்டிருந்த அன்றைய பௌத்தம், ஜைனம் போன்றவற்றில்




கூட தாந்த்ரீகத்தின் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது.

மஹாயான பௌத்தத்தில், தாந்த்ரீகம் மட்டுமே புத்தனின் போதனையை விட உயர்ந்ததாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஜைனத்திலும் தாந்த்ரீக தாக்கம் அளப்பரியது.

தாந்த்ரீகத்தில், மந்திரம் யந்திரம் சக்கரம் உபாசனை போன்ற பலவகை கூறுகள் உண்டு. இவைகள் மட்டுமல்லாது மருந்து மைதுனம் என்ற தனி கூறுகளும் உண்டு. மருந்து என்றால், பலவிதமான அபூர்வ மூலிகைகளை ஒருங்கிணைத்து ஆதார சக்கரங்களை விழிப்படையச் செய்து மூலாதாரம் சகஸ்ரத்தை நோக்கி செல்லுவதற்கு வழி ஏற்படுத்துவது ஆகும்.

மைதுனம் என்பது ஆணும் பெண்ணும், ஆடைகள் இல்லாமல் ஒருவரோடு ஒருவர் பாம்புகள் போல பிணைந்து, இருவரின் பிறப்புறுப்புகளும் இணைந்து, அதன் உணர்ச்சிப் பெருக்கால் சுக்கில சுரோணிதம் கீழ்நோக்கி வடிந்து ஓடிவரும். சிவ யோகத்தால் அதை தடுத்து நிறுத்தி குண்டலினிப் பாதையில் மேல்நோக்கி செலுத்துவதாகும். இந்த யோக நெறியில் பலரும் வழிதடுமாறி சருக்கி விழுந்துவிடும் அபாய நிலை உள்ளது. அதனால் தான் யோகிகளில் பலர் இந்தப் பாதையை தேர்ந்தெடுக்காமல் மற்ற பாதையை நோக்கிச் செல்வார்கள். சித்தர்களில் பெருவாரியான பேர்கள் மைதுன பாதையை தொடவே மாட்டார்கள். அதிகபட்சமாக அவர்கள் பயன்படுத்துவது மருந்து என்ற வழிவகையே ஆகும்.

தாய் தெய்வமான கொற்றவையை வழிபடுவது தமிழர்களுக்கு புதியதானது அல்ல. சரித்திர பூர்வமாக கூறவேண்டும் என்றால், சிந்து சமவெளி நாகரீக காலம் தொட்டே பெண் தெய்வ வழிபாடு தமிழர்களின் வாழ்க்கையோடு இணைந்த ஒன்றாகும். தொல்காப்பியம் மற்றும் பல சங்க இலக்கியங்களில் சக்தி வழிபாடு மிக சிறப்பாக சுட்டிக் காட்டப்படுகிறது. இந்த சக்தி வழிபாட்டோடு தாந்த்ரீகம் என்பது சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்கள் உருவான காலத்தில் இணைந்ததாக அறிய முடிகிறது.

சித்தர்களின் தலைவர் என்று அழைக்கப்படும் திருமூலர் எழுதிய திருமந்திரத்தில், சைவ நெறியே பெருவாரியாக பேசப்பட்டாலும் திருமந்திரம் நான்காம் தந்திரத்தில் தாந்த்ரீக நெறி மிக விரிவாக அலசி ஆராயப்பட்டு எளிய மக்களும் புரிந்து கொள்ளுகிற வகையில் கூறப்படுகிறது. பரம்பொருளாகிய அம்மை அப்பனும் ஒருவரை விட்டு இன்னொருவர் அகலாது இருப்பதை சுட்டிக்காட்டி சிவம் என்பது படைப்பு காப்பு மறைப்பு அழிப்பு அருளல் என்ற ஐந்தொழிலை செய்வதாகவும் சக்தி என்பது இந்த ஐந்தொழில் செய்ய சிவனுக்கு சக்தியைக் கொடுப்பதாகவும் இருக்கிறது என்று காட்டப்படுகிறது. அதாவது, இயங்காமல் இருந்தால் அதன் பெயர் சிவம். இயக்கத்திற்கு வந்தால் அது தான் சக்தி என்பது திருமந்திர தத்துவமாகும்.

விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடு மெல்லிய லானது வாகும்.
விளங்கிடு மெய்ந்நின்ற ஞானப் பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே

என்று திருமூலர் திருமந்திரத்தில் ஆயிரத்து முன்னூற்று அறுபதாவது பாடலில் கூறுகிறார். அதாவது, பராசக்தி என்ற அம்மையை

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்





உயர்ந்த மெய்ப்பொருள் என்பது இதன் மையப் பொருளாகும். ஒளிமயமாக விளங்குகின்ற மெல்லிய இயல்புள்ள சக்தியே பரமசக்தியாக ஞானப் பொருளாக திகழ்கிறாள் என்று அழகான கவிதையில் திருமூலர் பாடுகிறார். அதுமட்டுமல்ல,

தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமும் ஆக்கி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே

என்கிறார். பொதுவாக சிவனையோ திருமாலையோ குறிப்பிடும் போதுதான் நோக்கும் இடமெல்லாம் நிறைந்த நிர்மலப் பொருள் என்று ஞானிகள் கூறுவார்கள். அத்தகைய பரப்பிரம்ம நிர்மலப் பொருளே, தானே எங்கும் நிறைந்து தானே சகலத்தையும் படைத்து தானே சகலத்துக்கும் கொடுத்து தானே சகலத்தையும் சம்ஹாரம் செய்வதாகக் கூறுவார்கள். இங்கே திருமூலர் ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற முத்தொழிலையும், அதாவது பிரம்மனாகவும் சிவனாகவும் விஷ்ணுவாகவும் இருப்பவள் அன்னை ஆதிபராசக்தியே என்ற புதிய கருத்தை முன்வைக்கிறார். அது மட்டுமல்ல அன்னை பராசக்தி, தானே முளைத்த சுயம்பு என்று கூறி அவளே உலகத்தின் மூல காரணம் என்கிறாள்.

தனக்கு மேலே தன்னை படைத்ததாக தன்னை ஆட்சி செய்வதாக யாரும் இல்லாதவள் ஆதி பராசக்தி. அதனால் அவள் தத்துவ நாயகி என்றும் அறியப்படுகிறாள். தேவருக்கும் மூவருக்கும் யாவருக்கும் எங்கும் என்றும் தலைவியாகத் திகழ்பவள் அன்னை. அத்தகைய அன்னைக்கு தற்பரை என்ற சிறப்புப் பெயர் சூட்டி அவளை அனாதியானவள் என்று நமக்கு திருமூலர் காட்டுகிறார்.

சொற்களை எடுத்து வர்ணனை செய்யும் மனதிற்கும் அப்பாற்பட்டவள். மனதைக் கடந்தும் மனதை அடக்கியும் நிற்பவள் அவள். அதனால் தான் அவள் மனோன்மணியாகிறாள். அவளின் கட்டளையை நிறைவேற்ற பேய்ப் படையும் ஊழிப்படையும் கூளிப்படையும் கொண்டிருக்கிறாள். இவை அனைத்திற்கும் மேலாக, சிவ கணங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டவள் என்று சக்தியின் வலிமையை நமக்குக் காட்டுகிறார்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434



அடுத்த இதழிலிருந்து...
பூஜ்ய ஸ்ரீ
சத்குரு சதாசிவ
பிரும்மேந்திரரின்
அற்புதம் வாய்ந்த
சொற்பொழிவுகள்,
அருளுரைகள்,
தத்துவங்கள்
நமது இதழில்
வெளிவரும்

# சிவ உபாசனை

## மஹிமையும் சாஸ்திரமும்

சிவனென்றால் மங்களமயமான தத்துவம். அவர் சுயம்பு மற்றும் ஸ்வயம்ப்ராகாஸமாய் இருப்பதோடு உலகத்தையும் ஒளிமயமாக்குவதால் அவரே பரபிரம்மம் ஆகிறார். சிவனின் அருளை பெற பக்தர்கள் மகாசிவராத்திரி அன்று ச்ரத்தையோடு உபாசனை செய்கின்றனர். ஆன்மீக சாஸ்திரப்படி செய்யப்படும் உபாசைனையால் பக்தியுணர்வு பெருகி அதிக பலன் கிடைக்கின்றது. இப்பயனைப் பெற சிவ உபாசனையின் மஹிமையையும் சாஸ்திரத்தையும் அறிந்துக்கொள்ளளாம்.

### மஹாசிவராத்திரி விரத வழிமுறை

மஹாசிவராத்திரி அன்று மட்டும் இரவில் ஒரு பகுதியில் சிவன் ஓய்வெடுக்கிறார். அப்பொழுது சிவனின் ஸகுண காரியம் நின்று போய் தியான நிலையிலிருந்து சமாதி நிலைக்கு செல்கிறார். சிவன் சுயஸாதனையில் ஈடுபடும் நேரமிது. இக்காலத்தில் உலகத்திலுள்ள தமோ குணத்தை சிவதத்துவம் ஸ்வீகரிப்பதில்லை. அதனால் தமோகுணம் அல்லது தீயசக்திகளின் ஆக்கிரமிப்பு அதிகமாகிறது. இந்த ஆக்கிரமிப்பு நம்மை பாதிக்காமலிருக்க சிவராத்திரி விரதம் இருக்க வேண்டும். அதன் மூலம் நம்முள் சிவ தத்துவத்தை அதிகரித்து தமோகுணத்தை நசிக்க முடியும்.

### சிவபூஜையில் சில விதிமுறைகள்

மஞ்சள் மற்றும் குங்குமம் உற்பத்தியின் சின்னம்; சிவன் லயத்தின் அதிதேவதையானதால் சிவனுக்கு இவற்றை அர்ப்பணிக்கக் கூடாது.



ஆவுடையாருக்கு சம்பங்கி, ஜாதிமல்லி, குண்டு மல்லிகை, தும்பை போன்ற வெள்ளை மலர்களை, காம்பு ஸ்வாமியை நோக்கி இருக்குமாறு ஸமர்ப்பிக்க வேண்டும்.

தாழம்பூ, மல்லிகை, ஹீனா, தர்பார் சுகந்தத்தை உடைய ஏதாவது 2 ஊதுபத்திகளை ஏற்றி 3 முறை சுற்ற வேண்டும்.

மஹாசிவராத்திரியன்று சிவதத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடக் கூடிய கோலத்தைப் போடவும்!

### நந்தியின் கொம்புகளுக்கிடையே சிவதரிசனம்

சிவலிங்கத்திடமிருந்து அதிக சக்தி வாய்ந்த அதிர்வலைகள் வெளிப்படுவதால், தரிசிப்பவர்களுக்கு உடல் சூடு, தலை பாரம் போன்ற கஷ்டங்கள் ஏற்படலாம். நந்தியின் கொம்புகளுக்கிடையே தரிசனம் செய்வதன் மூலம் தரிசிப்பவர்களின் ஸாத்வீகத் தன்மை அதிகரிப்பதால் இக்கஷ்டங்கள் ஏற்படுவதில்லை.

தரிசன முறை: சிவாலயத்தில் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை நிமிர்த்தி நந்தி உட்கார்ந்துள்ளார். நந்தியின் வலதுபக்கம் நின்று அல்லது உட்கார்ந்து, இடது கையால் நந்தியின் பின்புறத்தைத் தொட்டு வலது கையின் கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல்களை நந்தியின் கொம்புகளில் வைத்து அந்த இடைவெளியில் சிவலிங்கத்தை தரிசிக்கவும்.

### சிவனுக்கு வில்வார்ப்பணம் ஏன்?

வில்வத்திற்கு சிவதத்துவத்தை ஆகர்ஷிக்கக் கூடிய சக்தி அதிகமானதால், வில்வத்தை அர்ப்பணிக்கின்றனர். காம்பு சிவனை நோக்கியும் வில்வதளம் நம்மை நோக்கி இருக்குமாறு அர்ப்பணிக்கவும்.

### சிவலிங்கத்திற்கு பாதி ப்ரதக்ஷிணம் ஏன்?

சிவலிங்க ப்ரதக்ஷிணம் செய்யும்போது அபிஷேகம் விழும் இடம் வரை சென்று அதைத் தாண்டாமல் மறுபடியும் திரும்பி ப்ரதக்ஷிணத்தை முடிக்க வேண்டும். ஆவுடையாரிலிருந்து வெளிப்படும் சக்தியை சாதாரண மனிதர்களால் தாங்க முடியாததால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படலாம்; அதனால் சிவலிங்கத்திற்கு பாதி ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

### சிவராத்திரியன்று சிவனின் நாமஜபம்

மஹாசிவராத்திரியன்று சிவதத்துவம் மற்ற நாட்களைக் காட்டிலும் 1000 மடங்கு அதிகமுள்ளது. அன்று ‘ஓம் நமசிவாய’ என்ற நாமஜபத்தை அதிக அளவு பக்திபூர்வமாக செய்வதால் வாயு மண்டலத்திலுள்ள சிவதத்துவத்தை அதிகம் க்ரஹிக்க முடிகிறது.

‘நம: சிவாய’ மந்திரத்தின் ஆன்மீக அர்த்தம்

- ந: அனைத்து லோகங்களுக்கும் அதிபதி
- ம: பரம ஞானமளிப்பவர், மஹாபாதகங்களை நசிப்பவர்
- சி: மங்களமளிப்பவர், சாந்தம் மற்றும் அனுக்ரஹம் செய்பவர்
- வா: நந்திவாஹனர், வாசுகி மற்றும் வாமாங்கி சக்திகளின் சின்னம்
- ய: பரமானந்தரூபம், மங்களத்தின் இருப்பிடம்

### சிவனின் விசேஷத் தன்மைகள்

கங்கா எப்படி சூரிய குடும்பத்தில், சூரியன் நடுநாயகமாக திகழ்கிறதோ அப்படி நம் உடம்பிற்கும் ஆத்மா மூலாதாரமாக விளங்குகிறது. அதே போல் ஒவ்வொரு பொருளின் சைதன்யம் மற்றும் பவித்ரத்தின் நடு மையமாக ‘கங்’ விளங்குகிறது. “கங்” கின் உற்பத்தி ஸ்தானம் ‘கங்கா’. சிவனுடைய சிரஸிலிருந்து கங் பொழிவதால் கங்கை சிவனுடைய சிரஸிலிருந்து வருகிறது என்பது ஐதீகம்.

சந்திரன் சிவனின் தலையை, சந்திரன் அலங்கரிக்கிறது. நேசம், கருணை, தாயன்பு ஆகிய உணர்ச்சிகளின் பிறப்பிடமாக சந்திரன் திகழ்கிறது. ஆகையால், ‘சந்த்ரமா’ என்கின்ற நிலை, இம்மூன்று உணர்ச்சிகளையும் ஒருங்கே பெற்றதாகிறது.

நெற்றிக்கண் சிவனின் இடது கண் முதற் கண்ணாகவும், வலது கண் இரண்டாவது கண்ணாகவும், புருவ மத்தியில் சூட்சமமாக உள்ள நெற்றிக் கண் மூன்றாவது கண்ணாகவும் கருதப்படுகிறது. மேல் நோக்கி நீண்டிருக்கும் மூன்றாவது கண், மற்ற இரு விழிகளின் கூட்டு சக்தியை பிரதிபலிக்கிறது. தெய்வீக சக்தியின் இருப்பிடமாக திகழ்கிறது. அதற்கு, ‘ஜோதிர்மட்’ ‘வியாசபீட்’ என்றும் சில பெயர்கள் உள்ளன.

நாகம் சிவனின் மற்றொரு பெயர் ‘புஜங்க பதிஹாரி’. ‘புஜங்க’ என்றால் நாகம். அதாவது தூய்மையான பொருள், ‘பதி’ என்றால் பேணி பாது காப்பவன், ‘ஹாரி’ என்றால் கழுத்தில் ஹாரத்தை அணிந்திருப்பவன்.இதிலிருந்து புஜங்கபதிஹாரி என்பவன் தூய்மையான பொருளை பேணி பாதுகாத்து, தன் கழுத்தில் மாலையாக அணிந்து கொள்பவனாகிறான். மேலோட்டமான பார்வைக்கு, அவை நாகங்களாக தெரிந்தாலும், உண்மையில் அவை ஒரு விதமான ஏணிகளாக பயன்படுகின்றன. அவற்றின் வாலைப்பிடித்துக் கொண்டோமேயானால் விரைவில் ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும்.

பஸ்மா (விபூதி) எது பிறந்து, முடிவில் சாம்பலாகிறதோ, அதற்கு பஸ்மா என்று பெயர். பூமியிலுள்ள



எல்லா உயிர்களும், இந்நெருப்பிலிருந்து பிறந்து, பின்பு நெருப்பிலேயே ஐக்கியமாகின்றன. சரீரம் அழியக்கூடியது. அதனைத் தொடர்ந்து நினைவுறுத்தும் சின்னமே பஸ்மம், என்பதே பஸ்மத்தின் உள்ளர்த்தம்.

ருத்ராக்ஷம் ருத்ரா+அக்ஷ ருத்ராக்ஷா ஆகின்றது. 'அக்ஷ' என்றால் 'கண்', ருத்ரா+அக்ஷா என்றால், எது எல்லாவற்றையும் பார்த்து காரியங்களை செய்கின்றதோ அதைக் குறிக்கும் (உதா. மூன்றாவது கண்), அக்ஷாவின் இன்னொரு அர்த்தம் 'அச்சாணி'. கண், ஒரு அச்சாணியைக் கொண்டு சுழல்கிறது.அதனால் கண்ணிற்கும் அக்ஷ என்று பெயருண்டு. ருத்ராக்ஷம் பீஜம் ஆகும். அது என்றும் குறைவதில்லை. ஆத்மாவும் அவ்வாறேதான். 'ருத்ராக்ஷம், ஆத்மாவின் சின்னமாகும்'. ருத்ராக்ஷம் சிவப்பு நிறமாகவும் மீனை போல் தட்டையாகவும் காட்சியளிகிறது. அதில் மஞ்சள் நிறத்தில் கோடுகள் உள்ளன. அதன் ஒரு பக்கத்தில், வாயைப் போன்ற ஒரு பிளவு காணப்படுகிறது, ருத்ராக்ஷம் ஸாத்வீக அதிர்வுகளை க்ரஹிக்கவும், வெளியிடவும் செய்கிறது, உண்மையான ருத்ராக்ஷம் நம் விரல்களால் உணர முடியும். அச்சமயம், அது வெளியிடும் நல்ல அதிர்வுகளை நாம் க்ரஹித்துக் கொள்கிறோம். புலித்தோல் புலி, ( ரஜ, தம குணங்களின் சேர்க்கை), கொடூரத் தன்மையை குறிக்கின்றது. சிவன் இத்தகைய புலியைக் (ரஜதம) கொன்று, தனது ஆசனமாக்கியிருக்கிறார்.

சிவனின் மனித ரூபத்தில் நான்கு விதமான ஆபரணங்கள் உள்ளன

டமரு இது சப்த ப்ரமத்தைக் குறிக்கின்றது. இதிலிருந்து மூல ஒலியான 52 எழுத்துக்களும், 14 மஹேச்வர ஸூத்திரங்களும் உருவாயின. இதன் மூலம் வர்ணமாலா உருவானது. பின்னர் ப்ரபஞ்சம் இதிலிருந்து தோன்றியது.

திரிசூலம் திரிசூலத்தின் மூன்று பிளவுகள் குறிப்பதாவது

அ. மூன்று குணங்களாகிய சத்வ, ரஜ, தம

ஆ. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றுக்கு அடித்தளமாக விளங்குவது.

இ. விருப்பம், ஞானம், செயல்பாடு.

பாசம் (அல்லது) மான் பாசம் என்பது காலபாசத்தைக் குறிக்கிறது. மான் நான்கு வேதங்களை குறிக்கின் றது.

பரசு இது அறியாமையை அடியோடு வேறுக்கும் சின்னமாக விளங்குகின்றது.

மஹாசிவராத்திரி மஹாசிவராத்திரியின் போது சிவதத்துவம் மற்ற நாட்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக செயல்பாட்டில் உள்ளது. சிவதத்துவத்தின் அதிகபட்ச லாபம் பெற, மஹாசிவராத்திரியன்று சிவனுக்கு பக்திபூரணமாக பூஜை, அர்ச்சனை செய்து, ஓம் நம: சிவாய நாமஜபத்தை அதிக அளவு செய்ய வேண்டும். நம: சிவாய என்பது சிவனின் பஞ்சாக்ஷர மந்திரமாகும்.

## சில பிராத்தனைகள்

ஹே மஹாதேவா, உன்னைப்போன்ற வைராக்கியம் என்னிடமும் நிர்மாணம் ஆகட்டும்.

ஹே சிவசங்கரா, தீய சக்திகளின் தாக்குதலிலிருந்து நீ என்னைக் காப்பாற்று, உன்னுடைய நாமஜபமாகிய பாதுகாப்பு கவசம் எப்பொழுதும் என்னைச் சுற்றி இருக்கட்டும். இதுவே உன் சரணங்களில் நான் செய்யும் பிராத்தனை.

– தகவல் ஸனாதனின் நூல் 'சிவன்' மற்றும் www.hindujagruti.org தொடர்பு : 09380949626





# ரத சப்தமிக்கு எருக்கன் இலை, தண்ணீர் ஏன்?

மகாபாரதப் போரில் அர்ஜுனனால் அம்பு படுக்கையால் வீழ்த்தப்பட்ட பீஷ்மர் நினைத்த நேரத்தில் உயிர் விடலாம் என்ற வரத்தினால் உத்தராயணத்தில் உயிர் விட அம்புப் படுக்கையில் காத்திருந்தார். உத்தராயணம் வந்த பிறகும் உயிர் பிரியவில்லை. அவரைப் பார்க்க வேத வியாசர் வந்தார்.

''வியாஸா, நான் என்ன பாவம் செய்தேன்? ஏன் இன்னும் என் உயிர் போகவில்லை?" என்று பீஷ்மர் கேட்டார்.

"பீஷ்மா, நீ மனோ வாக்கு காயத்தால் தீங்கு புரியாவிட்டாலும் பிறர் செய்யும் தீமைகளைத் தடுக்காமல் இருந்தது பாபம். அதற்கான தண்டனையிலிருந்து தப்பமுடியாது.'' என்கிறார் வியாசர்.

சபை நடுவே பாஞ்சலியின் உடையை துச்சாதனன் பறித்து அவமானம் செய்தபோது அதை தடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தது தான் செய்த மிகப்பெரிய தவறு என பீஷ்மர் உணர்ந்தார்.

''வியாஸா இதற்கு விமோசனம் எது?

'பீஷ்மா எப்பொழுது உன் தவறை உணர்ந்து வருந்துகிறாயோ, அப்போது அகன்று விட்டாலும் அனைத்தையும் கண்டும் காணமல் இருந்த கண்கள், செவி, வாய், தோள், கைகள், புத்தி உள்ள தலை ஆகியவை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றார் வியாசர்.

உடனே சூரியனின் நெருப்பைக் கொண்டு தன்னைப் சுட்டுப் பொசுக்குமாறு வேண்டுகிறார் பீஷ்மர்.

''இதற்கு எருக்க இலையை காட்டிய வியாசர், ''அர்க்கம்'' என்றால் சூரியன். இதை தலையில் சூடியுள்ளார் சூரியன். பிரம்மச்சாரியான விநாயகருக்கு உகந்தது எருக்க இலை.

அதேபோல் பிரம்மச்சாரியான உனக்கும் இந்த எருக்கஇலையால் அலங்கரிக்கிறேன் என்றார். உடனே சிறிது சிறிதாக அமைதியடைந்த பீஷ்மர் ஏகாதசி அன்று உயிர்நீத்தார்''.

இதன் காரணமாகத்தான் ரத சப்தமியன்று நாம் செய்த பாவங்கள், நமது முன்னோர் பாபங்கள் தீர எருக்கன் இலையை தலையில் வைத்து நீர்நிலைகளில் நீராடினால் அறிந்தும் அறியாமலும் செய்த தீய செயல்களுக்கான சுமை குறையும் என்பதால்தான் நமது முன்னோர்கள் ரத சப்தமியன்று மேற்கண்ட நடைமுறையை கையாண்டனர்.

# ஆங்கிலேயருக்கு காட்சி தந்த சிவபெருமான்

யோக யாத்ரா என்ற புத்தகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள அதி அற்புத நிகழ்வு இது.

இறைவனை நேரில் கண்ட ஆங்கிலேயர் பற்றிய இந்த நிகழ்வினை இங்கே பதிவு செய்வது பொருத்தமாக இருக்குமென இதை இங்கே பதிவு செய்கிறேன்.

1879 ஆம் ஆண்டு பிரிட்டனின் ஆட்சியின் கீழ் இந்திய இருந்தது. ஆங்கிலேய அதிகாரியான லெப்டி னென்ட் கர்னல் மார்ட்டின் அகர் மால்வா ஆப்கானிஸ்த்தான் நாட்டிற்கு எதிரான போரில் படையை தலைமை ஏற்று வழி நடத்தி கொண்டிருந்தார்.

கர்னல் மால்வா தன் மனைவிக்கு தன் நலன் குறித்து கடிதங்கள் அனுப்புவது வழக்கம் ஆனால் இந்த போர் நீண்டு கொண்டு சென்றது மேலும் கர்னிலிடமிருந்து எந்த கடிதமும் அவரது மனைவிக்கு வரவில்லை.

கர்னலின் மனைவி கடிதம் வராதது கண்டு துயருற்றார், ஒரு நாள் உலவ குதிரை சவாரி சென்றவரின் கண்களில் பைஜிநாத் கோவில் தென்பட்டது, அந்த கோவிலின் உள்ளிருந்து ஒலித்து கொண்டிருந்த சங்கொலியும் மந்திர ஒலிகளும் அவரை ஈர்க்க உள்ளே சென்று அங்கே பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்த வேதியர்களை கண்டார்.

துயருற்ற முகத்தை கண்ட வேதியர்கள் காரணத் தை கேட்ட பிறகு வேதியர்கள் சிவபெருமான் பக்தர்களின் பிரார்த்தனைகளுக்கு செவிமடுத்து அருள் புரிபவர் எனவும் தன்னை அண்டியவர்களின் துயரங்களில் இருந்து மீட்பவர் என்றும் கூறி கர்னலின் மனைவிக்கு ஓம் நமசிவாய எனும் லாகுருத்ரி அனுஷ்ட்டான் மந்திரத்தை தொடர்ந்து 11 நாட்கள் உச்சரித்து பிரார்த்தனை புரியுமாறு கூறுகின்றனர்.

கர்னலின் மனைவியும் தனது கணவன் எந்த துயருமின்றி வீடு திரும்பினால் பைஜிநாத் ஆலயத்தை புதுப்பித்துத் தருவதாக வேண்டி கொண்டு வீடு திரும்புகிறார்.

லகுருத்ரி அனுஷ்ட்டான மந்திரத்தை உச்சரிக்க தொடங்கி சரியாக பதினோராம் நாள் செய்தி கொண்டு வருபவர் கர்னலிடமிருந்து செய்தியை கொண்டு வருகிறார், அதில் எழுதி இருந்தது : போர்க்களத்தில் இருந்து

தொடர்ச்சியாக உனக்கு நான் கடிதங்களை அனுப்பி கொண்டிருந்தேன் ஆனால் சட்டென ஒரு நாள் அனைத்து புறங்களில் இருந்தும் எதிரிகள் எங்களை சூழ்ந்து விட்டனர், நாங்கள் தப்பிச்செல்ல இயலாதவாறு சிக்கி கொண்டோம் நம்பிக்கையற்ற சூழலில் அங்கே சற்று நேரத்தில் ஒரு நீண்ட கேசமுடைய இந்திய துறவியை கண்டேன்,அவரது கரங்களில் மூன்று முனை



களையுடைய கூறிய ஆயுதம் கொண்டிருந்தார் மேலும் அவரது தோற்றம் மெய்சிலிர்க்கும் வண்ணமும் மேலும் அவர் தனது கையில் இருந்த அந்த ஆயுதத்தை கையாண்ட விதமும் மகத்தானவிதமாக இருந்தது, இந்த சிறந்த மனிதனை கண்ட எதிரிகள் பின்வாங்கி ஓடிவிட்டனர், அந்த துறவியின் கருணையினால் தோல்வியை தழுவ வேண்டிய தருணம் நேரெதிராக மாறி வெற்றியை பெற்றோம், இவைகள் எல்லாம் சாத்தியமானதன் கரணம் அவர் அணிந்திருந்த புலித்தோலும் கைகொண்டிருந்த மூன்று முனை உடைய கூறிய ஆயுதமே,அந்த உன்னத துறவி என்னிடம் கவலை கொள்ள வேண்டாம் என்றும் என் மனைவி பிரார்த்தனை மூலம் கேட்டுகொண்டதற்கு இணங்க காக்க வந்ததாகவும் கூறினார்.

இந்த கடிதத்தை வாசிக்கும் கணமே கர்னலின் மனைவி கண்கள் ஆனந்த கண்ணீரை சொரிந்தன, அவரது இதயம் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தது, அவர் சிவபெருமானின் பாதங்களில் சரணடைந்தார்.

சில வாரங்களுக்கு பின் கர்னல் மார்ட்டின் திரும்பிய பின் அவரது நடந்தவற்றை விவரித்தார், கர்னல் மற்றும் அவர் மனைவியும் அது முதல் சிவ பக்தர்களாக விளங்கினர்.

1883 ஆம் ஆண்டு கர்னல் மற்றும் அவர் மனைவி 16000 ரூபாய் ஆலயத்தை புதுப் பிக்க நன்கொடை கொடுத்தனர், இந்த செய்திகள் இன்றும் பைஜிநாத்தின் கோவில் கல்வெட்டுக்களில் உள்ளது, பிரிட்டிசாரால் கட்டப்பட்ட ஒரே ஆலயமாகும்.

– சிவகுமார், ஒசூர்.




ஆன்மிகமலர் மெயில் புக்

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.